தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அரூரில் 23 மி.மீ. மழை**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், அரூரில் 23 மி.மீட்டர் மழை பதிவானது.
தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயில் வாட்டி வந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை முதல் நள்ளிரவு வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்தது. இதில் அரூரில் 23 மி.மீ., தருமபுரியில் 6 மி.மீ., மாவட்ட ஆட்சியரகத்தில் 4 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டியில் 3 மி.மீ., மாரண்டஅள்ளியில் 5 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தில் சராசரியாக 5.33 மி.மீ. மழை பதிவானது.

**கொடைக்கானலில் மரக்கன்றுகள் நடும் விழா**

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் உலக வானிலை ஆராய்ச்சி தினத்தை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

இதையொட்டி, சன் அரிமா சங்கம் மற்றும் 12ஆவது வார்டு பொதுநலச் சங்கம் சார்பில், மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, சன் அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவர் ரவீந்திரன் தலைமை வகித்து, மரக் கன்றுகளை நட்டு வைத்து, மரங்களின் பயன்பாடு குறித்து விளக்கிப் பேசினார்.

முன்னதாக, சங்கச் செயலர் யூஜின் வரவேற்றார். நகர்மன்ற உறுப்பினர் ஆஷா ரவீந்திரன் நன்றி கூறினார்.

இதில், மின் பணியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் மாணிக்கம், பொதுச் செயலர் பாபு, பொருளாளர் ராஜா மற்றும் மற்றும் 12ஆவது வார்டு சங்கம், சன் அரிமா சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க கீழ்பவானி விவசாயிகள் கோரிக்கை**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையில் இருந்து எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரோட்டில் இச்சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து சங்கத் தலைவர் செ.நல்லசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பவானிசாகர் அணையில் தொடர்ந்து அரசு ஆணைகளுக்கும், விதிமுறைகளுக்கும், நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் எதிராக நடந்துவரும் நீர்நிர்வாகம் தொடர்பாக ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், கரூர் ஆகிய 4 மக்களவைத் தொகுதி வேட்பாளர்களிடமும் நியாயம் கேட்கவும், நெருக்கடி கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மின் அணைகளில் எடுக்கக் கூடாத தண்ணீர் போக 10 டி.எம்.சி. உள்ளது. இப்போது கீழ்பவானி அணையில் 3.2 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. இவற்றைக் கொண்டு, 2 ஆண்டுகளாகப் பாசனம் பெறாத பகுதிக்கு எள் சாகுபடி செய்யத் தண்ணீர் திறக்க வேண்டும். நடப்பு ஆண்டில் கீழ்பவானி அணைக்கு 45 டி.எம்.சி. தண்ணீர் வந்துள்ளது. 40,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட பழைய பவானி பாசனங்களுக்கு காவிரி தீர்ப்பின்படி 8.13 டி.எம்.சி. மட்டுமே விடப்பட வேண்டும். ஆனால்,

பொதுப்பணித் துறை 18 டி.எம்.சி. தண்ணீரை வழங்கியிருக்கிறது. 2.07 லட்சம் ஏக்கர் பரப்பளவு கொண்ட கீழ்பவானி பாசனத்திற்கு 28 டி.எம்.சி. கொடுக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டு ஒரு மண்டலத்திற்கு 24 டி.எம்.சி. கொடுக்கப்பட்டுள்ளது. மறு மண்டலம் காய்ந்து கிடக்கிறது என்றார்.

இக்கூட்டத்தில் சங்கச் செயலர்கள் யு.சி.பழனிசாமி, பி.பி.துரைசாமி, செ.கோபிநாத், இரா.தங்கராசு, சேகர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் மாநிலம் தமிழகம் மட்டுமே: சட்டப்பேரவைத் தலைவர்**

**ராசிபுரம்,**

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கும் மாநிலம் தமிழகம் மட்டுமே என்று சட்டப்பேரவைத் தலைவர் ப.தனபால் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில், விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு இழப்பீடு வழங்கல், மானிய இடுபொருள்கள், கோடை பயிர் சாகுபடித் திட்ட இடுபொருள்கள் வழங்குதல் ஆகிய முப்பெரும் விழா செவ்வாய்க்கிழமை ராசிபுரத்தில் நடைபெற்றது.

விழாவில் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்.

விழாவில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையை வழங்கி சட்டப்பேரவைத் தலைவர் ப.தனபால் பேசியது:

தமிழகத்தில் 3-ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள முதல்வர் ஜெயலலிதா நலிவடைந்த நிலையில் இருந்த துறைகளை முன்னேற்றுவதற்காக பல நல்ல திட்டங்களை தீட்டி செயல்பட்டு வருகிறார்.

விவசாயிகளைப் பாதுகாக்க தமிழக பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் ரூ.55.40 கோடி வறட்சி நிவாரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தற்போது வேளாண் துறையை நவீனமயமாக்க அதிக நிதி ஒதுக்கியுள்ளார். இதன்படி, கருவிகள் பயன்படுத்தி நவீன சாகுபடி முறைகள் கையாளப்படுகின்றன.

தமிழத்தில் இதன்மூலம், 100 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான இடுபொருள்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது விவசாயிகளுக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பேசியது:

நாமக்கல் மாவட்டத்தில் நீராதாரத்தைப் பெருக்க பண்ணை குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

1932 பண்ணை குட்டைகள் மாவட்டத்தில் அமைக்க இலக்கு நிர்ணயித்து இதில் 310 குட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றார் அவர். முன்னதாக, வேளாண்மை இடுபொருள்கள் கண்காட்சியையும் சட்டப்பேரவைத் தலைவர் பார்வையிட்டார்.

விழாவில் 66 பயனாளிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.25.30 லட்சம் இழப்பீட்டு தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும், 66 பயனாளிகளுக்கு ரூ.4.30 லட்சம் மதிப்பிலான வேளாண் இடுபொருள்களும் வழங்கப்பட்டன.

ராசிபுரம் நகர்மன்றத் தலைவர் எம்.பாலசுப்பிரமணியம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் இ.கே.பொன்னுசாமி, 'அட்மா' திட்ட தலைவர் எம்.காளியப்பன், ஆர்.சி.எம்.எஸ். தலைவர் எஸ்.பி.தாமோதரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கே.சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குநர் கே.தமிழ்செல்வன் வரவேற்றார்.

**விவசாயிகளுக்கு இடுபொருள்கள் அளிப்பு**

**நாமக்கல்,**

ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தில் நாமகிரிப்பேட்டை வட்டார விவசாயிகளுக்கு ரூ.9.8 லட்சம் மதிப்பிலான இடுபொருள்கள் அளிக்கப்பட்டன.

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வட்டாரத்திலுள்ள மத்துரூட்டு, நாரைக்கிணறு, முள்ளுக்குறிச்சி, பெரியகுறிச்சி, பெரியகோம்பை ஆகிய கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள், பண்ணை வள மேம்பாட்டுப் பணிகள், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது பண்ணை வள மேம்பாட்டுப் பணிகளின் கீழ், வீரிய மக்காச்சோளம் செயல் விளக்கத்திடல் அமைக்கத் தேவையான வீரிய ஒட்டு மக்காச்சோளம், நுண்ணூட்டம் வழங்குதல், தீவனச் சோளம் மேம்பாட்டு திட்டத்தில் விதை உபகரணங்களும், சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதியும் வழங்கும் விழா நாமகிரிப்பேட்டையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் இ.கே.பொன்னுச்சாமி தலைமை வகித்து பயனாளிகளுக்கு இடுபொருள்களை வழங்கினார்.

அப்போது, ரூ.1.81 லட்சம் மதிப்புடைய வீரிய ரக மக்காச் சோள விதைகள், ரூ.23 ஆயிரம் மதிப்புடைய நுண்ணூட்டம், ரூ.1.76 லட்சம் மதிப்புடைய தீவனச் சோள

உபகரணங்கள், சுழல் நிதியாக தலா ரூ.25,000 வீதம் 24 குழுக்களுக்கு ரூ.6 லட்சம் என மொத்தம் ரூ.9.8 லட்சம் மதிப்புள்ள இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் விரிவாக்க அலுவலர் ஆர்.சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். ஊராட்சித் தலைவர்கள், நீர்வடிப் பகுதி சங்கத் தலைவர்கள், விவசாயிகள் பெருமளவில் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் ராமச்சந்திரன், ஜோதிமணி, பொறியாளர் பூபதி உள்ளிட்டோர் செய்தனர்.

**நாமக்கல் மாவட்டத்தில் 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடக்கம்**

**நாமக்கல்,**

தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி, மாவட்டம் முழுவதும் 2.06 லட்சம் மரக் கன்றுகள் நடவு செய்யும் பணி நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். தொடர்ந்து அவர் 66 மரக் கன்றுகளை நட்டு பேசியது:

வருகிற 28-ஆம் தேதிக்குள் இந்த மாவட்டத்தில் 6,600 மரக் கன்றுகள் நட செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலக வளாகத்தில் 66 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. கொல்லிமலை, முள்ளுக்குறிச்சி, ராசிபுரம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு உள்பட மாவட்டம் முழுவதும் வனத் துறையின் சார்பில் மரக் கன்றுகள் நடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் ஆலம், அரசு, வேம்பு, புங்கன், வாகை, களச்சி, மணிக்குங்கன், மந்தாரை, தேக்கு, மகிழம், பூவரசு, இலைபூவரசு, அலங்காரைக்கொன்றை, சரக்கொன்றை உள்ளிட்ட பல்வேறு வகையான மரக் கன்றுகள் நடப்படுகின்றன.

நிகழாண்டு, நாமக்கல் மாவட்டத்தில் 2,06,530 மரக் கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு 2 லட்சம் மரக் கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இலக்கைவிட 2 மடங்கு அதிகமாக 4 லட்சம் மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டன. வறட்சி நிறைந்த இந்த மாவட்டத்தில் மரங்களை வளர்த்து, பசுமையை உருவாக்கினால்தான் மழை அதிகம் பெற முடியும். எனவே, பொதுமக்கள் கட்டாயமாக வீட்டுக்கு 2 மரக் கன்றுகளை நடவு செய்ய முன்வர

வேண்டும் என்றார் ஆட்சியர். மாவட்ட வன அலுவலர் ஆர்.பத்மாவதி, மாவட்ட ஊராட்சித் தலைவர் கே.காந்தி முருகேசன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய செயற் பொறியாளர் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"கரூர் மாவட்டத்தில் உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு'**

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் தோகைமலை உள்ளிட்ட 3 இடங்களில் கால்நடைகளுக்கான உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ. 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி.

கரூர் மாவட்டம், க.பரமத்தி ஒன்றியம் முடிகணம் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் தரம் உயர்த்தப்பட்ட புதிய மருந்தகம், உலர் தீவன கிடங்குகளை அண்மையில் திறந்து வைத்து அமைச்சர் செந்தில்பாலாஜி பேசியது: தற்போது மழை குறைந்து, கடுமையான வறட்சி நிலவுவதால், கால்நடைகளுக்கு தீவனங்கள் பற்றாக்குறை ஏற்படும் நிலயை அறிந்து, அரசு விலையில் கால்நடைகளுக்கு உலர் தீவனம் வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.கரூர் மாவட்டத்தில் தோகைமலை, தரகம்பட்டி, அரவக்குறிச்சியில் உலர் தீவன விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு முதல் கட்டமாக கரூர் மாவட்டத்துக்கு ரூ. 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலர் தீவனம் கிலோ ரூ. 2 வீதம் மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படும்.

வாரத்துக்கு அதிகபட்சமாக 105 கிலோ வரை உலர் தீவனம் வழங்கப்படும் என்றார். தொடர்ந்து முடிகண், கோடாந்தூர், இரும்பூதிப்பட்டிகளில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்களை அமைச்சர் திறந்து வைத்தார். நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார். கரூர் மக்களவை உறுப்பினர் மு. தம்பிதுரை முன்னிலை வகித்தார்.

**"கரும்பு வளர்ப்போர் நலச் சங்க கோரிக்கைக்கு பிப். 28-க்குள் பதிலளிக்க வேண்டும்'**

**கரூர்,**

கரும்பு டன்னுக்கு ரூ. 2,550 வழங்க வேண்டும் என புகழூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கத்தின் கோரிக்கைக்கு பிப். 28-ம் தேதிக்குள் ஆலை நிர்வாகம்

பதிலளிக்க வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா அறிவுறுத்தியுள்ளார்.

கரூர் மாவட்டம், புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச்சங்கம் சார்பில் 2013-14-ம் ஆண்டு கரும்பு அரவை பருவத்துக்கு மாநில அரசின் பரிந்துரை விலையான கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 2,550 வழங்க வேண்டும் என்பதை ஆலை நிர்வாகத்திடம் வலியுறுத்தப்பட்டு வந்தது.

ஆனால், ஆலை நிர்வாகம் ரூ. 2,250 மட்டுமே வழங்கி வந்ததால், மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா தலைமையில் புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச்சங்கம், ஆலை நிர்வாகம், மாவட்ட நிர்வாகம் பங்கேற்ற முத்தரப்புக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன் முன்னிலை வகித்தார். இந்த கூட்டத்தில், புகளூர் ஈஐடி சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர்கள் ரமேஷ், பார்த்திபன், மேலாளர்கள் (கரும்பு) ஆர். ரமேஷ், செல்வராஜ் ஆகியோரும், கரும்பு வளர்ப்போர் சங்கத்தின் சார்பில் ஈரோடு, திருப்பூர் மாவட்ட கரும்பு ஆலை சங்கத் தலைவர் எம்.டி.சண்முகராஜ், கரூர் மாவட்ட தலைவர் ஆடிட்டர் நல்லசாமி, பெட்டவாய்த்தலை அன்பழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், கரும்பு வளர்ப்போர் சங்கம் சார்பில், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2550 வழங்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. ஆனால், ஆலை தரப்பில் ரூ. 2,250 மட்டுமே தரப்படுகிறது. இதனால், எங்களின் கோரிக்கையை ஏற்று, அரசு அறிவித்தபடி ரூ. 2,550 வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.ஆலை அதிகாரிகள் தரப்பில், நிர்வாகத்தை கலந்து பேசி தெரிவிப்பதாக கூறப்பட்டது.பின்னர் பேசிய மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, பிப். 28-ம் தேதிக்குள் ஆலை நிர்வாகத்துடன் பேசி தீர்வை அறிவிக்க வேண்டும் என்று ஆலை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## "பட்டுப்புழு வளர்ப்பு அதிக வருமானத்தை கொடுக்கும்'

**ஆலங்குடி,**

நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களைவிட பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என்றார் மத்திய பட்டு வாரிய இணை இயக்குநர் டாக்டர் ஜிக்கன்னா.

ஆலங்குடி அருகே மத்திய, மாநில பட்டுவாரியம் சார்பில் நடைபெற்ற விவசாயிகளுக்கான 15 நாள் பயிற்சி முகாமின் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களைவிட பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும். மேலும், மற்ற விவசாயத்தைப் போல பயிர் செய்துவிட்டு மாதக்கணக்கில் காத்திருக்கத் தேவையில்லை. மல்பரியை ஒரு முறை பயிர் செய்து அதைக் கொண்டு பட்டுப்புழு வளர்த்து வாழ்நாள் முழுவதும் மாத வருமானம் பெறலாம்.

பட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் நடவு மானியமாக ஏக்கருக்கு 10,500 ரூபாயும், சொட்டுநீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாயும் ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும், புழு வளர்ப்பு மனை மானியமாக 1500 சதுர அடிக்கு 82,500 ரூபாயும், தளவாட மானியம் 52,500 ரூபாயும், மல்பரி விவசாயிகளுக்கு இலவச காப்பீட்டு திட்டம் உள்ளிட்டவை வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பட்டுப்புழு வளர்ப்பதற்கு இப்பகுதி விவசாயிகள் அனைவரும் முன்வந்து பயன்பெற வேண்டும் என்றார்.விழாவுக்கு தமிழ்நாடு பட்டு வாரிய உதவி இயக்குநர் மல்லிகா, மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ், 25 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

ஏற்பாடுகளை இளநிலை ஆய்வாளர்கள் குழந்தைவேலு, முருகேசன், அய்யாத்துரை ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சி பெற்ற 25 விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விவசாயி சிவக்குமார் நன்றி கூறினார்.

## திருவரங்குளத்தில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பப் பயிற்சி

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் சார்பில், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமில், வேளாண் வணிக துணை இயக்குநர் நா. அண்ணாமலை தலைமை வகித்து பேசியது:

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்கவும், நவீனப்படுத்தவும் தேவையான கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்பக் கட்டுமானத்திற்கு 25 சதவிகிதமும், அதிகபட்சமாக ரூ. 50 லட்சம் மானியமும் கிடைக்கும். மேலும், குளிர்பதன வசதி மற்றும் குளிரூட்டப்பட்ட வாகனம் உட்பட்ட வசதிகளுக்கு (தோட்டக்கலை பயிர்கள் அல்லாத விளைபொருட்களுக்கு) 35 சதவீதமும், அதிகபட்சமாக ரூ. 5 கோடி மானியம் கிடைக்கும்.

உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டயப் படிப்புகளுக்கான புத்தகங்கள், பரிசோதனைகூட கருவிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளுக்கு அதிகபட்சம் ரூ. 1 கோடி மானியம் கிடைக்கும். தொழில்முனைவோர் பயிற்சி ஒன்றுக்கு ரூ. 3 லட்சம், உணவு பதப்படுத்தும் ஒருபொருள் பயிற்சி மையத்திற்கு அதிகபட்சம் ரூ. 6 லட்சம் நிலையான முதலீட்டிற்கும், ரூ. 3 லட்சம் சுழற்சி முதலீட்டிற்கும் வழங்கப்படும்.

பலபொருள் பயிற்சி மையத்திற்கு நிலையான முதலீட்டிற்கு ரூ. 15 லட்சம் மற்றும் சுழற்சி முதலீட்டிற்கு ரூ. 5 லட்சம் மானியமாக வழங்கப்படும். விளம்பரம் மூலம் மேம்பாட்டு திட்டங்களுக்கு திட்ட மதிப்பில் 50 சதவீதம், அதிகபட்சம் ரூ. 4 லட்சம் மற்றும் திட்டத்திற்கேற்றவாறு நிதி உதவி அனுமதிக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் பதப்படுத்தும் நிலையம் மற்றும் சேகரிப்பு மையம் அமைக்க திட்ட மதிப்பில் அதிகபட்சம் ரூ. 2.5 கோடி மானியம், இறைச்சி கூடங்கள் நவீனப்படுத்த 50%, அதிகபட்சம் ரூ. 5 லட்சம் வழங்கப்படும்.

குளிர்சாதன வாகனங்களுக்கு 50 சதவீதமும், அதிகபட்சம் ரூ. 50 லட்சம் மானியம் அனுமதிக்கப்படும். விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் உணவு பதப்படுத்துதல் தொடர்பாக இந்த விவரங்களின் அடிப்படையில், வங்கிகளின் ஒப்புதலுடன் தயார் செய்து அளிக்கும் வரைவுத் திட்ட அறிக்கைகள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கக் குழுவில் வைத்து, தகுதியின் அடிப்படையில் ஒப்புதல் அளித்து, மாநில உணவு பதப்படுத்தும் இயக்க குழுவிற்கு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார் அவர்.

திருச்சி வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய பேராசிரியர் சுப. செல்வம், பழங்கள், காய்கறிகள், நெல், சிறுதானியம், பயறுவகைகள், எண்ணெய்

வித்துக்கள், பால், ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, இறால், காளான், மீன் வகைகள், நறுமணப் பொருட்கள், தென்னை உள்ளிட்டவற்றில் உணவு பதப்படுத்துவதன் அவசியம், வழிமுறைகள் மற்றும் கூடுதல் வருவாய் குறித்து பேசினார்.

**"விவசாயிகள் விளைபொருள்களை சேமிப்புக் கிடங்கில்  வைத்தால் கடன் கிடைக்கும்' தஞ்சாவூர்,**

மத்திய சேமிப்புக் கிடங்கில் விளைபொருள்களை வைத்தால், வங்கியில் 7 சத வட்டியில் அடமானக் கடன் கிடைக்கும் என்றார் மத்திய சேமிப்பு கிடங்கின் முதன்மை மேலாளர் மரியதாஸ்.

கும்பகோணம் அருகே சுவாமிமலையில் விவசாயிகளுக்கான தானிய சேமிப்புத் தொழில்நுட்பம் குறித்த இரு நாள் பயிலரங்கத் தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது: விவசாயிகளின்  விளைபொருள்களை பாதுகாப்பதற்கான சட்டத்தை 2007 ஆம் ஆண்டில் மத்திய அரசு கொண்டு வந்தது. அதன்படி, விவசாயிகள் தங்களுடைய பொருட்களை மத்திய சேமிப்பு கிடங்கில் பாதுகாப்பாக வைக்க முடியும்.

விளைபொருள்களை சேமிப்பு கிடங்கில் வைத்து, ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

அந்த ரசீது இருந்தால் வங்கியில் 7 சத வட்டியில் அடமான கடன் தரப்படும்.

அந்தக் கடனை ஓராண்டுக்குள் செலுத்திவிட்டால் 4 சதம் மட்டுமே வட்டி பெற்றுக் கொள்ளப்படும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தினால் விவசாயிகளுக்கு எளிய முறையில் கடன் கிடைக்கும்.

மத்திய, மாநில அரசுகள் கட்டித் தரும் கிடங்குகளை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் மரியதாஸ்.

சுவாமிமலை பேரூராட்சி தலைவர் தே. ராதாகிருஷ்ண ஸ்தபதி தலைமை வகித்தார்.

துணைத் தலைவர் கல்யாணகுமார், மத்திய சேமிப்பு கிடங்கின் கும்பகோணம் மேலாளர் ரவி, வேளாண்மை உதவி அலுவலர் செல்வமணி, முன்னோடி விவசாயிகள் ராம. தியாகராஜன், அலவந்திபுரம் பிரகாசம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**தஞ்சாவூர்,**

ஆட்சியரகத்தில்  வெள்ளிக்கிழமை (பிப்.28) நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாகக் காரணங்களுக்காக வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**காரைக்காலில் தினமும் 2 ஆயிரம் கிலோ திருக்கை மீன் வரத்து**

**காரைக்கால்,**

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திற்கு தினமும் 2 ஆயிரம் கிலோ வீதம் பல்வேறு வகையான திருக்கை மீன்கள் பிடித்து வரப்படுகின்றன.

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திற்கு கடந்த 2, 3 வாரங்களாக திருக்கை மீன் வரத்து அதிகரித்துள்ளது. ஆழ்கடல் பகுதியில் திருக்கை வகைகள் கூட்டமாக இருக்கக்கூடியவை. கடந்த சில நாள்களாக சுமார் 2 ஆயிரம் கிலோ வரை திருக்கை மீன்கள் வந்துகொண்டிருக்கின்றன.

புள்ளித் திருக்கை, குருவித் திருக்கை, கருந்திருக்கை, செந்திருக்கை என இவற்றில் பல வகை உள்ளன. இதில் குருவித் திருக்கை, கருந்திருக்கை மீன்கள் காரைக்கால் மீனவர்கள் வலையில் பெருமளவு சிக்குகின்றன.  இதுகுறித்து மீனவர்கள் செவ்வாய்க்கிழமை கூறியது:

அண்மைக்காலமாகத்தான் திருக்கை வரத்து அதிகமாக இருக்கிறது. ஒரு திருக்கை மீன் 30 கிலோ முதல் 100 கிலோ வரை உள்ளது. இவற்றை தூத்துக்குடி, கேரள பகுதிக்கு முகவர்கள் வாங்கிச் சென்று பதப்படுத்தி வெளியூருக்கு ஏற்றுமதி செய்கின்றனர். கிலோ ரூ. 40 முதல் ரூ. 60 வரை விலைக்கு வாங்குகின்றனர். பெரும் எடையில் உள்ள மீனை வலையிலிருந்து படகில் ஏற்றி, துறைமுகத்திற்கு கொண்டுவருவதில் மிகுந்த சிரமம் உள்ளது. ஆனால், கிடைக்கக்கூடிய வருவாய் குறைவாக இருக்கிறது. பொதுவாக திருக்கை மீன்கள் மருத்துவ குணம் கொண்டவை என்பதால், இம்மீனுக்கு பல்வேறு பகுதியில் முக்கியத்துவம் உள்ளது என்றனர்.

**நாகையில் விரைவில் ரூ. 380 கோடியில் கப்பலணை, மீன் ஆராய்ச்சி நிலையம்:ஆட்சியர்**

**நாகப்பட்டினம்,**

தமிழக அரசு அறிவித்த கப்பலணை, மீன் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம், நாகையில் ரூ. 380 கோடியில் விரைவில் செயல்படுத்தப்படும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில், நாகை அவுரித் திடலில் அமைக்கப்பட்டிருந்த அரசுத் துறை சாதனைகள் விளக்கப் புகைப்படக் கண்காட்சியை திங்கள்கிழமை தொடக்கிவைத்து அவர் பேசியது:

நாகையில் கடந்த 2 ஆண்டுகளில் மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளம், படகு நிறுத்துமிடம், கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் உள்ளிட்ட பல புதிய வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த வேலைவாய்ப்பு அலுவலகம் உள்பட பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டம் கட்டப்பட்டுள்ளது.இதுதவிர, மாவட்டத்தின் குக்கிராமங்களையும் இணைக்கும் வகையில் பல புதிய வழித் தடங்களில் பேருந்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. சாலைப் பணிகள் மற்றும் பாலம் அமைக்கும் பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நாகை மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணி ரூ. 30 கோடியில் நடைபெற்று வருகிறது.

கனரக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைத்தல், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை மருத்துவக் கல்லூரிக்கு இணையாக தரம் உயர்த்தும் பணி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 600 கோடியில் மழைநீரை தேக்கும் திட்டம், ரூ. 79.4 கோடியில் நாகையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி ஆகிய திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளன.தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்த, நாகையில் ரூ. 380 கோடி மதிப்பில் பசுமை சூழலுடன் கூடிய கப்பலணை, மீன் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம், மின் இணைப்புகளை பூமிக்கடியில் கொண்டுச் செல்லும் திட்டம் ஆகியன விரைவில் செயல்படுத்தப்படும் என்றார் ஆட்சியர்.இதைத் தொடர்ந்து, அரசுத் துறைகளின் சாதனைகள் விளக்கப் புகைப்படக் கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார்.செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ. செந்தில், நகர்மன்றத் தலைவர் மஞ்சுளா சந்திரமோகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**பெரம்பலூர் புறவழிச்சாலை, தானியக் கிடங்கு திறப்பு**

**பெரம்பலூர்,**

பெரம்பலூரில் ரூ. 11 கோடியில் அமைக்கப்பட்ட புறவழிச் சாலை, வேப்பந்தட்டையில் ரூ. 46 லட்சத்தில் கட்டப்பட்ட தானிய கிடங்கு, நகர்புறங்களுக்கான மின் ஆளுகைத் திட்டம் ஆகியவற்றை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தமிழக முதல்வர் திங்கள்கிழமை தொடங்கிவைத்தார்.தமிழ்நாடு அரசு மின் மாவட்ட திட்டத்தின் கீழ், பொதுமக்கள் இ-சேவை மையத்தை, சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார். அதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக தரை தளத்தில் அமைக்கப்பட்டுள்ள இ- சேவா மையத்தில் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது குத்துவிளக்கேற்றி, இ-சேவை மையத்தின் மூலம் வழங்கப்பட்ட வருமானச் சான்று, சாதிச் சான்று மற்றும் இருப்பிடச் சான்றுகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

பின்னர், நெடுஞ்சாலைத்துறை மூலம் செஞ்சேரி முதல் கோனேரிப்பாளையம் வரை ரூ. 11 கோடியில் அமைக்கப்பட்ட பெரம்பலூர் புறவழிச் சாலையையும், வேப்பந்தட்டையில் ரூ. 46 லட்சத்தில் கட்டப்பட்ட 1,000 டன் கொள்ளளவு கொண்ட தானிய கிடங்கையும், காணொலி காட்சி மூலம் தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிகளில், மாநில வேளாண் விற்பனை வாரியத் தலைவர் மா. ரவிச்சந்திரன், நகர்மன்றத் தலைவர் சி. ரமேஷ், துணைத் தலைவர் ஆர்.டி. ராமச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆர்.பி. மருதராஜா (பெரம்பலூர்), க. ஜெயலெட்சுமி, (வேப்பந்தட்டை), நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் கிருஷ்ணசாமி, உதவிப் பொறியாளர் வீரப்பன், நுகர்ப்பொருள் வாணிபக் கழக துணை மேலாளர் ஞானப்பிரகாசம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நெல்லை மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு முகாம்: மார்ச் 1 ல் தொடக்கம்**

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதலை தடுக்கும் வகையில் மார்ச் 1 முதல் 21 ஆம் தேதிவரை சிறப்பு முகாம் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும் என ஆட்சியர் தெரிவித்தார்.திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சிச் செயலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் பங்கேற்ற

கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதுகுறித்து கிராம மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான பயிற்சி முகாம் திங்கள்கிழமை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

முகாமுக்கு தலைமை வகித்து ஆட்சியர் மு. கருணாகரன் பேசியதாவது: தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் பாதிக்கப் பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டதால் பாதிப்பு அதிகளவில் இல்லை.

இம்மாவட்டத்தில் கோமாரி நோய்த் தாக்குதலை தடுக்கும் வகையில் மார்ச் 1- ம் தேதி முதல் 21 ஆம் தேதிவரை 21 தினங்களுக்கு சிறப்பு முகாம் மூலம் தடுப்பூசி போடுவதென திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, ஊராட்சித் தலைவர்கள், செயலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் கிராம மக்களிடையே கோமாரி நோய்த் தடுப்பு முகாம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கோமாரி நோய் இல்லாத மாவட்டமாக மாற்றும் வகையில் அனைவரும் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

இதில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சி. கெங்கராஜா, கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் சங்கரகுமார், மக்கள் தொடர்பு அலுவலர் க. மாரியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 28-ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வரும் பிப்ரவரி 28 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று கோரிக்கைகளை மனுவாக அளிக்கலாம்.

இதனை ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

மூலிகை சாகுபடியில் மானியம்



இந்தியாவில் மூலிகையின் தேவை அதிகரிக்கும் அளவு மூலிகை உற்பத்தியானது இல்லை. 90% மேல் கம்பெனிகளின் தேவையானது இயற்கையாக காணப்படும் மூலிகைகளை சேகரித்து அனுப்புவதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே மூலிகை பயிரிடுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆகையால் மூலிகைப் பாதுகாப்பு மற்றும் அதன் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேசிய மூலிகைப் பயிர் வாரியமானது 57 தாவரங்களைப் பயிரிடுவதற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது. இவ்வாரியமானது அழிந்து வரும் அரிதான மூலிகைகளை பயிரிடுவதற்கு 75%மும், உற்பத்தி குறைந்து வரும் நீண்ட காலப் பயிர்களுக்கு 50% மும் மற்ற மூலிகைகளுக்கு 20%மும் மானியம் வழங்குகிறது.

மானியத்தை தனி விவசாயியாக அல்லாமல் குழுவாக செயல்பட்டால் பெறுதல் எளிதாகும்.தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலையில் நன்கு வளரும் மூலிகைகள் மற்றும் அதனை 1 ஹெக்டேரில் சாகுபடி செய்ய மூலிகைப் பயிர் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மானித்தைக் காண்போம்.

வசம்பு- 20%, சோற்றுக்கற்றாழை-20%, பேரரத்தை - 20%, சித்தரத்தை -20%, தண்ணீர்விட்டான் கிழங்கு - 20%, வேம்பு - 20%, நீர் பிரம்மி - 20%, சாரணத்தி - 20%,

சென்னா (அ) அவுரி - 20%, நித்திய கல்யாணி - 20%, வல்லாரை -20%, சங்குபுஸ்பம் - 20%, மாகாளி - 20%, வாவிலங்கம் -20%, நெல்லி -20%, சிறுகுறிஞ்சான் - 20%, நன்னாரி -20%, கச்சோலம் -20%, பூனைக்காலி -20%, துளசி-20%, கீழாநெல்லி -20%, திப்பிலி -20%, செங்கொடிவேலி-20%, குறுந்தொட்டி-20%, மணத்தக்காளி-20%, சீனித்துளசி-20%, நீர்மருது-20%, தான்றி-20%, கடுக்காய்-20%, சீந்தில் -20%, நொச்சி-20%, வெட்டிவேர்-20%, அமுக்கிரா-20%, வில்வம்-50%, வாகை-50%, மாவிலங்கம்-50%, கண்வலிக்கிழங்கு- 50%, பாலா-50%, கொடிவேலி -50%, வேங்கை-50%, நஞ்சறுப்பான்-50%, சந்தன வேங்கை - 75%, சந்தனம் - 75%

**குறிப்பு:** விவசாயிகள் மேற்கண்ட மூலிகைகளை பயிரிடுவதற்கு தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1. சந்தைப்படுத்த வாய்ப்புள்ள மூலிகைகளை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். மானியத்தைக் கருத்தில் கொண்டு சாகுபடி செய்யக் கூடாது. சிறந்த மூலிகைக் கம்பெனிகளுடன் ஒப்பந்த சாகுபடியை மேற்கொள்வது நல்லது.

2. இடவசதி மற்றும் நீர் வசதியைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. தரமான விதைகளை தேர்வு செய்வது மிகவும் முக்கியம்.

4. சாகுபடி முறை, அறுவடை முறை, பதப்படுத்தும் முறை மற்றும் செலவினங்களை மூலிகைகளை தேர்வு செய்யும் முன் அறிந்து கொள்வது அவசியமாகும்.
மானியம் பற்றிய விபரங்களை அருகில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**ந.கணபதிசாமி, திருமங்கலம்,**

**மதுரை- 625 706.**

**88700 12396**

சின்ன சின்ன செய்திகள்





**முந்திரி பழ மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள்:** (முந்திரி பழ ஜூஸ், முந்திரிபழ சிரப்பு, முந்திரி பழ ஜாம், முந்திரி மிட்டாய்) ஒரு எக்டரிலிருந்து 500 கிலோ முந்திரிக்கொட்டை கிடைக்கிறது. கொட்டை நீக்கப்பட்ட முந்திரிப்பழத்தை விவசாயிகள் பயன்படுத்துவதில்லை. காரணம் அதில் உள்ள "டானின்' என்ற வேதிப்பொருளாகும். பழத்தை சாப்பிடும் போது தொண்டையில் கரகரப்பு தன்மை ஏற்படும். இதனைப்போக்க பழத்தை நீராவியில் வேகவைத்து அல்லது உப்பு நீரில் ஊறவைத்து, கரகரப்புத் தன்மையை நீக்கிய பின்னர் பழத்திலிருந்து ஜூஸ், சிரப், ஜாம், மிட்டாய் (கேன்டி) போன்ற மதிப்புக்கூட்டிய பொருட்களை தயாரித்து பயன்படுத்தலாம்.

*முந்திரிபழ ஜூஸ்:* முந்திரிப்பழத்தை நன்றாக கழுவி அலுமினியம் அல்லது சில்வர் தட்டுகளில் பரப்பி ஆவியில் 5 முதல் 10 நிமிடம் வேகவைக்க வேண்டும். பின்னர் அவற்றை குளிர்ந்த தண்ணீரில் நன்றாகக் குளிர விடவும். பின்னர் சாறுபிழியும் இயந்திரங்களைக் கொண்டு சாற்றை பிழிந்து எடுக்க வேண்டும். பின்னர் அவற்றை மெலிதான துணியில் வடிகட்ட வேண்டும். வடிகட்டிய சாற்றை ஒரு கிலோவிற்கு 430 மி.கி. என்ற அளவில் ஜலடினை சேர்த்து நன்கு கலக்கி 15 நிமிடம் வைக்க வேண்டும். தெளிவான பழரசத்தை (அதாவது ஒரு கிலோ ஜூஸ்-க்கு) 60 கிராம் சர்க்கரையை கொதிக்க சேர்க்க வேண்டும். பின்னர் அவற்றை வைத்து 90-95 டிகிரி செல்சியசில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாட்டில்களில் நிரப்பி பாதுகாக்கவும்.

*மேலும் விவரங்களுக்கு:* முனைவர் க.கீதா, முனைவர் எம்.அசோகன், வேளாண்மை அறிவியல் நிலையம், புதுக்கோட்டை. போன்: 04322- 290 321.

*கொதிக்க வைத்த அரிசி தவிட்டின் பயன்பாடுகள்:* அரிசி தவிட்டில் ஒரைசனால், டோகோ பெரால், டோக்கோட்ரினின், பைட்டோஸ் டிரால், பைட்ரக் அமிலம்,

அரபினோஸ், பினாலிக் அமிலங்கள், வெக்டின் போன்ற ஊட்டச்சத்துக்கள் காணப்படுகின்றன. எனவே அரிசி தவிட்டை நொதிக்கச் செய்து அதன் மூலம் பயனுள்ள பாக்டீரியாக்களை உற்பத்தி செய்து அரிசி தவிட்டின் மதிப்பை உயர்த்தலாம்.
*ஈஸ்ட் மூலம் நொதிக்கச் செய்தல்:* நொதிக்க வைப்பதன் மூலம் அரிசி தவிட்டின் புரதம், தாதுக்கள் அதிகமாகச் செரித்து இரத்தத்துடன் கலக்கின்றன. நொதித்தப்பின் புரதச்சத்து எளிதில் செரிமானமாகக்கூடியதாக மாறுவதற்கு சாக்ரோமைஸியே செரிவிசியே வகைகளை அதிக அளவில் உதவுகின்றன. ஒரு செல் புரதங்கள் அளவும் அதிகரிப்பதற்கு உடலில் பல நன்மைகளை அளிக்கின்றன. நாம் உண்ணும் உணவில் உள்ள தீமை அளிக்கும், உடலுக்கு ஒவ்வாத பல பாக்டீரியாக்களை சாக்ரோமைஸியே அழிக்கிறது.நொதிக்க வைத்த அரிசி தவிட்டை 60 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 5 முதல் 6 மணி நேரம் உலர்த்த வேண்டும். பின்பு அரைத்து பொடி செய்ய வேண்டும். தேவைப்படும் பொழுது அரிசி தவிட்டைப் பொடியை இட்லி, தோசை மாவில் கலந்து பயன்படுத்தலாம்.
*உணவுப் பொருட்கள்:* நொதிக்க வைத்த அரிசி தவிட்டில் அதிக ஊட்டச்சத்து நிறைந்து காணப்படுகிறது. அரிசி தவிட்டில் அதிக நார்ச்சத்து காணப்படுவதால் மலச்சிக்கலை குணப்படுத்தப்பயன்படுகிறது. குக்கீஸ் உணவு, இட்லி மிக்ஸ், தோசை மிக்ஸ், பிரட் மஃபின், பிஸ்கட், நூடுல்ஸ் போன்ற உணவு பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு முனைவர் இ.ஜான்சன், முனைவர் து.சீனிவாசன், முனைவர் ஜோ.ஷீலா, முனைவர் ந.சோபா, தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர்- 642 101.

**சிறு தானியங்களில் தோல்நீக்கும் இயந்திரம்:** கோயம்புத்தூரில் உள்ள மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி சி.பாலசுப்ரமணியன் தெரிவிப்பது, தினை,சோளம், வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்ற தானியங்கள் அளவில் மிகச் சிறியதாக இருப்பதால் தோல் நீக்குவதில் கூடுதல் நேரம் எடுக்கும். 30 சதவீதம் உமி இருப்பதால் அப்படியே உணவில் சேர்த்துக் கொள்ள முடியாது. சிறு தானியங்களை உடைத்து உமி மற்றும் தவிடை முற்றிலுமாக அகற்றும் வகையில் சி.ஐ.ஏ. இ. (இஐஅஉ Mடிடுடூஞுt) என்ற இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்கள். இதன் விலை ரூ.60,000/-. மேலும் விபரங்களுக்கு ""முதன்மை

விஞ்ஞானி" மண்டல அலுவலகம், மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம், கோயம்புத்தூர்-641 003. போன்: 86810 17811.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## தாவரத்தடுப்புப் படிமட்டம்

மலைப்பிரதேசங்களில் 16 முதல் 33 சதவீதம் சரிவு உள்ள பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புக்கு படிமட்டம் அமைப்பது பரிந்துரை செய்யப்படுகிறது. இத்தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிப்பதால் சரிவான பூமியில் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களை மேலும் கீழும் சாகுபடி செய்வதைக் காட்டிலும் மழைநீர் ஓட்டம் 50 சதவீதமும் மண் அரிப்பு 98 சதவீதமும் குறைகிறது.

படிமட்டங்களை வெவ்வேறு முறைகளில் அமைக்கலாம். அவைகள்

1. இயந்திரங்களைக் கொண்டு மேடான பகுதியில் இருந்து மண்ணை வெட்டி பள்ளமான பகுதியில் இட்டு சமன் செய்வது.

2. படிப்படியாக அ) இயந்திரத் தடுப்புகள், ஆ) தாவரத் தடுப்புகள் அமைப்பதன் மூலமாக படிப்படியாக படிமட்டம் அமைத்தல்.

தாவரத் தடுப்புகளைக் கொண்டு சில ஆண்டுகளில் படிப்படியாக படிமட்டம் அமைப்பதற்கு தாவரப் படிமட்டம் அல்லது பியூரோடோரிகன் படிமட்டம் எனப் பெயர். இம்முறையில் படிமட்டங்கள் அமைப்பது பொருளாதார ரீதியில் உகந்தது. இயற்கை வளங்களான மண் மற்றும் நீர்வளம் காக்கப்படுவதுடன் பயிர் மகசூலும் அதிகமாக கிடைக்கின்றது. இத்தகைய பலன்கள் சரிவான பூமியில் சாகுபடி செய்யும் போது நமக்குக் கிடைப்பதில்லை.

இயந்திரங்கள் மூலமாகப் படிமட்டம் அமைப்பதற்கு அதிக செலவு ஆகும். மேல்மண் மிகுந்த அளவில் பாதிக்கப்படுகிறது. எனவே இம்முறையில் படிமட்டம் அமைக்க முன்வருவதில்லை. ஆனால் இந்த தாவரத் தடுப்பு முறையில் படிமட்டம் அமைப்பதற்கு மிகக் குறைந்த செலவு தான் ஆகும். படிப்படியாக படிமட்டங்கள் அமைக்கப்படுவதால் மேல் மண் அதிக அளவில் பாதிக்கப்படுவதில்லை. எனவே துவக்கத்தில் மகசூல் குறைவும் இல்லை.

மகேந்திரன் மற்றும் ரகு ஆகிய விவசாயிகள் மேல்கவட்டி கிராமத்தில் தங்களது சரிவான பூமியில், தீட்டுக்கல்லில் உள்ள மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இந்த தொழில்நுட்பத்தை

கடைப்பிடித்து உள்ளார்கள்.அவர்கள் சம உயரக் கோடுகளில் இரு வரிசைகளில் வரிØகு வரிசை 50 செ.மீ. புல்லுக்கு புல் 50 செ.மீ. இடைவெளியில் இருகரணைகள் கொண்ட கோ-4 புற்களை இடைவிட்ட முறையில் நடவு செய்தார்கள். இவ்வாறு நடப்பட்ட இரண்டு தாவரத் தடுப்புகளுக்கு இடையே கிழங்கு, பீன்ஸ், கேரட், முட்டைகோஸ் போன்ற காய்கறிப் பயிர்களை மேலும், கீழும் சாகுபடி செய்யும் முறையின் மூலம் பயிரிட்டார்கள். இதனால் மண் மெதுவாக தாவரத் தடுப்பு நோக்கி நகர்ந்து படிந்து கொண்டே வந்தது. இதனால் படிப்படியாக 4 ஆண்டுகளில் படிமட்டம் உருவாகி விட்டது. இதனால் மண், இடப்படுகின்ற உரம் மற்றும் நீர் பூமியில் இருந்து வெளியேறுவது குறைந்தது. நல்ல ஈரப்பதம் கிடைத்தது. தடுப்புகளுக்கு இடையே போடப் பட்ட காய்கறிப் பயிர்களின் மகசூல் அதிகரித்தது. புற்கள் நன்கு வளர்ந்த பிறகு அவற்றை அறுவடை செய்து கறவை மாடுகளுக்குக் கொடுக்க முடிந்தது.

இத்தொழில் நுட்பத்தைக் (ஒரு ஹெக்டேர் சரிவான நிலத்தில்) கடைப்பிடிப்பதற்கு ஆகும் மொத்த செலவு ரூ.1790/- (கோ-4 புற்களைக் கொண்டு தாவரத் தடுப்புகள் அமைக்கப் பயன்படுத்திய புற்கரணைகளின் எண்ணிக்கை 2800, அதற்கான செலவு ரூ.420/- (1000 கரணைகளுக்கு ரூ.150/- வீதம்), கரணைகளை நடுவதற்கான செலவு ரூ.1000/- (ஒரு ஆளுக்கு ரூ.250/- வீதம் 4 ஆட்களுக்கு), இரண்டாம் ஆண்டில் பாடுவாசியான கரணைகளுக்கு பதிலாக மீண்டும் நடுவதற்குத் தேவைப்பட்ட கரணைகளின் எண்ணிக்கை 800, அதற்கான செலவு ரூ.120/- கரணைகளை நட ஆன செலவு ரூ.150/-) காய்கறி பயிர்களில் கூடுதல் மகசூல் கிடைத்தது மட்டுமின்றி கோ-4 புற்கள் அறுவடை மூலம் ஒரு வருடத்திற்கு ஒரு ஹெக்டேரில் அமைக்கப்பட்ட தாவரத் தடுப்புகளில் இருந்து சுமார் 22.63 டன் தீவனமும் கிடைத்தது. இதன் மதிப்பு சுமார் ரூ.21263/-

*இதர நன்மைகள்:* மண் அரிப்பு, மழைநீர் ஓட்டம் மற்றும் சத்து இழப்பு குறைந்தது. மண் ஈரப்பதம் காக்கப்பட்டது. அதனால் தாவரத்தடுப்புகளுக்கு இடையே வளர்க்கப்பட்ட பயிர்களின் மகசூலும் அதிகரித்தது.

இத்தொழில் நுட்பத்தை மிகச்சிறந்த முறையில் கடைப்பிடித்து வெற்றியடைந்தமைக்காக இவ்விரு விவசாயிகளும் புதுமைப் பண்ணையாளர் விருதைப் பெற்றுள்ளனர்.

**பொருளாதார ரீதியான பலன்கள்**

<u>வ.எண் - பயிர் - கூடுதல் மகசூல் (டன் / ஹெக்டேர்) - கூடுதல் வருவாய் (ரூபாயில்)</u>

1. உருளைக்கிழங்கு (ரூ.10/ கிலோ) - 6.5 - 65000
2. கேரட் (ரூ.12/ கிலோ) - 5.0 - 60000
3. பீன்ஸ் (ரூ.20/ கிலோ) - 3.75 - 75000
4. முட்டைகோஸ் (ரூ.3/ கிலோ) - 17.5 - 52500

**முனைவர் ப.சுந்தராம்பாள், முனைவர் கூ.கண்ணன்,**

**முனைவர் து.ச.சாகு**

**முனைவர் மா.மது மற்றும் பெ.சந்திரன், உதகமண்டலம்.**

## காய்கறி கழிவில் 'பயோ - காஸ்' உற்பத்தி! பாபா அணு ஆராய்ச்சி மையம் மூலம் அறிக்கை தயாரிப்பு

கோவை : கோவை மாநகராட்சி பகுதியிலுள்ள மார்க்கெட்களில் சேகரமாகும், காய்கறி கழிவுகளில் இருந்து 'பயோ காஸ்' உற்பத்தி செய்ய மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்காக, மும்பையிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையம் மூலம் திட்ட அறிக்கை தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கோவை மாநகராட்சி பகுதியில் தியாகிகுமரன் மார்க்கெட், உக்கடம் ராமர் கோவில் மார்க்கெட், சாய்பாபா காலனி அண்ணா மார்க்கெட், எம்.ஜி.ஆர்., மார்க்கெட், துடியலுார் மார்க்கெட், சிங்காநல்லுார் மார்க்கெட்; ஆர்.எஸ்.புரம், சுந்தராபுரம், போத்தனுார், சிங்காநல்லுார் பகுதியிலுள்ள உழவர் சந்தைகளில் தினமும் ச0 டன் அளவுக்கு காய்கறி கழிவு ஏற்படுகிறது.
காய்கறி கழிவுகள் குப்பையோடு குப்பையாக கலக்கப்பட்டு, வெள்ளலுார் குப்பை கிடங்குக்கு கொண்டு செல்லப்படுகிறது. காய்கறி கழிவு மக்கிப்போகும்போது, துர்நாற்றம் ஏற்பட்டு, பொதுச்சுகாதாரம் பாதிக்கிறது. வெள்ளலுார் குப்பை கிடங்கில், கழிவுகளில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கப்பட்டாலும், பிரச்னைகளுக்கு தீர்வு கிடைப்பதில்லை.இந்நிலையில், காய்கறி கழிவில் இருந்து, 'பயோ - காஸ்' உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. முதற்கட்டமாக சரவணம்பட்டி அம்மா உணவகத்தில் காய்கறி கழிவு மற்றும் ஓட்டல் கழிவுகளில் இருந்து 'பயோ - காஸ்' உற்பத்தி திட்டம்

துவங்கப்பட்டுள்ளது. மேலும், 'பயோ - காஸ்' சமுதாயகூடம் அமைக்கும் பணி நடக்கிறது. மேலும், மாநகராட்சி பகுதியிலுள்ள மார்க்கெட்களில் இருந்து சேகரமாகும் காய்கறி கழிவுகளை கொண்டு, மூன்று முதல் க0 டன் கொள்ளளவிலான மின்சாரம் தயாரிக்கும் ஆலையை நிறுவ மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக பரிட்சார்த்த முறையில், கவுண்டம்பாளையத்தில் புதிய மார்க்கெட் வளாகத்தில் அமைக்க, மாநகராட்சி பட்ஜெட்டில் அரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மார்க்கெட் காய்கறி கழிவுகளில் இருந்து 'பயோ - காஸ்' உற்பத்தி செய்ய, ஆய்வு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் முடிவு செய்துள்ளது. இதற்காக, நேற்று நடந்த மாமன்ற அவசர கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், "தியாகி குமரன் மார்க்கெட்டில் தினமும் கரு டன் காய்கறி கழிவு ஏற்படுகிறது;

துடியலுார் மார்க்கெட்டில் தினமும் ௩ டன்; சிங்காநல்லுார் உழவர் சந்தையில் தினமும் ௩ டன்; மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மார்க்கெட்டில் தினமும் ௩ டன்;

எம்.ஜி.ஆர்., மார்க்கெட்டில் ௩ டன்; பூ, பழம், ஆடு, மாடு அறுவை நிலையம் மற்றும் ஓட்டல் கழிவு தினமும் கரு டன் ஏற்படுகிறது.

இந்த திடக்கழிவுகளை கொண்டு 'பயோ - காஸ்' உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, 'பயோ - காஸ்' உற்பத்தி மையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. இந்த பணியை மும்பையிலுள்ள இந்திய அரசு நிறுவனமான, பாபா அணு ஆராய்ச்சி மையம் மூலம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது' என்றார்.

## மதுரை ஆவினை நவீனமயமாக்க.... ரூ.12.38 கோடி ! ரூ.2.69 கோடி மானியத்துடன் நிதி

மதுரை: மதுரை ஆவின் நிறுவனத்தில் பால் குளிரூட்டும் இயந்திரம் உட்பட பழைய இயந்திரங்களை மாற்றி, நவீனமயமாக்கவும், புதிய

அடிப்படை கட்டமைப்பை உருவாக்கவும், ரூ.12.38 கோடியில் பணிகள் துவங்கியுள்ளன.மதுரை, தேனி மாவட்டங்களில் விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்யும் மதுரை ஆவின் நிறுவனம், தினமும் 1.65 லட்சம் லிட்டர் பாலை பொதுமக்களுக்கு வினியோகம் செய்கிறது. 1967 முதல் துவங்கிய இந்நிறுவனத்தின் இயந்திரங்கள், 45 ஆண்டுகளை கடந்து இயங்கி வருகிறது.

தற்போது காலத்திற்கேற்ப இதனை நவீனப்படுத்துவதற்காக ஆவின் நிறுவனம் முன்வந்துள்ளது.ஒருங்கிணைந்த கூட்டுறவு பால்வள திட்டத்தின் கீழ், ரூ. 7 கோடியில்

புதிய இயந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இனி, மேம்படுத்தப்பட்ட பால் குளிர்விக்கும், பதப்படுத்தும் இயந்திரங்கள் செயல்படும். இதற்காக துவங்கியுள்ள பணிகள், ஆறு மாதங்களில் முடிவடையும்.

தவிர, ஆவின் நிறுவனத்தில் ஒரு லட்சம் லிட்டர் என்ற அளவில்தான், பால் பாக்கெட்டுகள் தயாரிப்பது, பால் நிரப்புவது, பால் டின்கள் கழுவுதல், பதப்படுத்துதல், ஸ்டோர் செய்தல் ஆகியவற்றிற்கான திறன் உள்ளது. இதனை 2 லட்சம் லிட்டர் அளவிற்கு மாற்ற, தேசிய உணவுப்பதப்படுத்தும் திட்டம் சார்பில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் ஆலோசனை நடத்திய குழு, சென்னை வேளாண்துறை விற்பனை வாரியத்திற்கு இப்பணிகளை பரிந்துரைத்தது. அத்துறை அதிகாரிகளின் பரிந்துரைப்படி, மத்திய அரசு ரூ. 2.69 கோடி மானியத்துடன், மொத்தம் ரூ.5.38 கோடி செலவிட உள்ளது. இதற்காக, சென்னை வேளாண் விற்பனை வாரிய இணை இயக்குனர் கக்கன், மதுரை துணை இயக்குனர் தவசிமுத்து ஆகியோர் நேற்று, ஆவின் நிறுவனத்தை பார்வையிட்டனர்.

நவீன குளிரூட்டப்பட்ட சேமிப்பு மைய பணிகள், ஒன்றரை ஆண்டுகளில் முடிந்து பயன்பாட்டுக்கு வரும். அதன்பின் அதிகப்படியான பால் கொள்முதல் செய்யும்போது, அவற்றை பவுடராக, வெண்ணையாக ஓராண்டு வரை கெட்டுப்போகாமல் சேமித்து வைக்கலாம்.பொதுமேலாளர் கிறிஸ்டி,உதவிப்பொதுமேலாளர் சுப்ரமணியன் கூறுகையில், "உற்பத்தி இடத்தில் இருந்து நுகர்வோர் வரை, பாலை தரம் குறையாமல் வினியோகிக்க வேண்டும். இதில் எந்த இடத்திலும், பாலின் தரம் குறையாமல் நுகர்வோருக்கு கொண்டு சேர்ப்போம். ஏப்ரல் மாதத்திற்கு பின் பால் உற்பத்தி அதிகரிக்கும். அதுபோன்ற நேரங்களில், இந்த குளிர்பதன மையத்தில் பாலை தரம்குறையாமல் சேமித்து வைக்க முடியும்," என்றனர்.

## மார்ச் 1ம் தேதி முதல் 21 நாட்கள் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் வரும் 1ம் தேதி முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி துவங்குகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1,099 ஊராட்சிகளிலும் மார்ச் 1ம் தேதி முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி துவங்குகிறது. இதற்காக ஒரு கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் அடங்கிய 143 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பகுதியிலும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. மாவட்டம் முழுவதும் 7 லட்சத்து

50 ஆயிரம் கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போட திட்டமிடப் பட்டுள்ளது. மார்ச் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை தொடர்ந்து 21 தினங்களும் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் தடுப்பூசி வழங்கும் முகாம் நடக்கிறது.

**செஞ்சி மார்க்கெட் கமிட்டியை விரிவுபடுத்த முடிவு : விளை பொருட்கள் நனைவது தடுக்கப்படும்**

செஞ்சி : செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு 20 ஏக்கர் நிலம் வாங்கி விரிவு படுத்துவது என அதிகாரிகள் மற்றும் வியாபாரிகள் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொருட்கள் நனைவது தடுக்கப்படும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இடப்பற்றாக்குறைசெஞ்சி மார்க்கெட் கமிட்டியில் இடப்பற்றாக்குறையால் கொள்முதல் செய்வதில் தொடர்ந்து பிரச்னை இருந்தது. இங்கு அடிக்கடி நெல் கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டது. கடந்த 24ம் தேதி திறந்த வெளி களத்தில் நெல் மூட்டைகள் இருந்ததால் மழையின் போது வியாபாரிகள் விலை எழுத முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கொள்முதல் நின்றது. விவசாயிகள் மறியல் செய்தனர். விவசாயிகள் மீது வழக்குசெஞ்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று முன்தினம் மழையில் நெல் மூட்டைகள் நனைந்ததால் வியாபாரிகள் நெல் கொள்முதலை நிறுத்தினர். இதனால் விவசாயிகள் மறியல் செய்தனர். இந்த மறியலில் கலந்து கொண்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் உட்பட 20 பேர் மீது செஞ்சி போலீசார் வழக்கு பதிந்துள்ளனர்.கூட்டம் இதையடுத்து நேற்று வியாபாரிகள், அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் மார்க்கெட் கமிட்டி செயலாளர் ஞானவேல் தலைமையில் நடந்தது. வியாபாரிகள் சங்க தலைவர் குமார், கவுரவ தலைவர் மாணிக்கம், செயலாளர் துரை குமார், பொருளாளர் ஏழுமலை, துணை தலைவர் சண்முகம், வியாபாரிகள் அய்யப்பன், விஜயகுமார், கண்காணிப்பாளர்கள் ரவி, சரவணன், கலந்து கொண்டனர். செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு 20 ஏக்கர் நிலம் வாங்கி மார்க்கெட் கமிட்டியை விரிவு படுத்துவது, வியாபாரிகள் நெல் இருப்பு வைத்துள்ள குடோன்களில் மூன்று குடோன்களை மூன்று நாட்களுக்குள் காலி செய்வது. மார்க்கெட் கமிட்டிக்கு உள்ளே வருவதற்கும், வெளியே செல்வதற்கும் தனித்தனி வழிகளை ஏற்படுத்துவது. லாட் வழங்க லாட் குச்சிகளை வாங்குவது, மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் அடிப்படை வசதிகளை செய்வது என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர்.தீர்வு இதனால் மார்க்கெட் கமிட்டியில் இடப்பற்றாக்குறையால் விவசாய பொருட்கள் நனைந்து வீணாவது தடுக்கப்படும். விரைவில் மார்க்கெட் கமிட்டி விரிவாக்க பணிகளை துவக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கால்நடைகள் பரிசோதனை கலெக்டர் கோரிக்கை**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் இலவசமாக வழங்கப்பட்ட கால்நடைகளை ஆய்வு செய்ய அதிகாரிகள் வரும் போது, கால்நடைகளை தவறாது, கால்நடை டாக்டர்களிடம் காண்பித்து, உரிய அறிவுரை பெற வேண்டுமென, கலெக்டர் விவேகானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இதுகுறித்து கலெக்டர் விவேகானந்தன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டில், 150 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 3,190 பயனாளிகளுக்கு, வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும், 2012-13ம் ஆண்டில், 150 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 5,372 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. 2013-14ம் ஆண்டுக்கு, 150 கறவை பசுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செப்டம்பர் மாதம் முடிய, 150 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 4,032 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, அதன்மூலம், 315 கன்றுக்குட்டிகளும், 42 ஆயிரத்து, 240 ஆட்டு குட்டிகளும் ஈன்றுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், 2013, பிப்ரவரி மாதம் முதல், ஜனவரி, 2014 வரை, விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கிய கிராமங்களில், இத்திட்டங்களின் மூலம் பயன் அடைந்த பயனாளிகளின் பராமரிப்பில் உள்ள கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் ஆகியவை ஆய்வு செய்ய வருகை தரும் போது, கால்நடைகளை தவறாது, கால்நடை டாக்டர்களிடம் காண்பித்து, கால்நடைகளின் நலன்காக்க தக்க அறிவுரை பெற வேண்டும், என்றார்.

**திருந்திய சாகுபடி முறையில் கரும்பு கூடுதல் மகசூலுக்காக விவசாயிகள் தீவிரம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில், கூடுதல் மகசூல் பெற திருந்திய சாகுபடி முறையில் கரும்பு சாகுபடியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் மற்றும் அமராவதி பாசனப்பகுதியில், லட்சக்கணக்கான ஏக்கரில், கரும்பு பயிரிடப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட கரும்பை தவிர, மற்ற கரும்புகள், வெல்லம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. கோபி, அத்தாணி, கவுந்தபாடி, அந்தியூர், ஆப்பகூடல், கூகலூர், ஒத்தகுதிரை ஆகிய பகுதிகளில், உருண்டை வெல்லம், நாட்டு சர்க்கரை மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. கவுந்தபாடி மற்றும் சித்தோடு வெல்ல மார்க்கெட்டில், இவை விற்பனை செய்யப்படுகிறது.
பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சி, பருவமழை பொய்த்ததால், கரும்பு உற்பத்தி மிகவும் குறைவாக காணப்படுகிறது. கிணறு மற்றும் போர்வெல் முறையில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கருணை வெட்டி, நடவு செய்வதன் மூலம் கூடுதல் நாட்கிறது. திருந்திய முறையில் கரும்பு நடவு செய்வதால், குறைவான

நாட்களில் முளைப்பு திறம் வருவதோடு, கூடுதல் மகசூல் கிடைக்கிறது.
நாற்று தயாரிப்பாளர்கள் கூறியதாவது:
கோபி சுற்று வட்டாரத்தில் நெல் பயிருக்கு அடுத்தபடியாக, கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கருணை நடவு செய்வதால், முளைப்பு திறன் பிடிக்க ஒரு மாதமாகிறது. திருந்திய முறையில் கரும்பு பயிர் நடவு செய்வதன் மூலம் விரைவாக விளைச்சலாகிறது. ஒரு குத்தில், 25 கரும்பு வரை வளரும். ஒரு ஏக்கருக்கு, 4,200 நாற்று முதல், 5,000 நாற்றுகள் வரை நடவு செய்ய வேண்டும். ஒரு நாற்றின் விலை, 1.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றனர்.

### சேதமடைந்த கீழ்பவானி வாய்க்கால்; சீரமைக்க கோரி பாசன சபை தீர்மானம்

ஈரோடு: கோபி கோட்டம், கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபையின், பகிர்மான கமிட்டி கூட்டம், கவுந்தப்பாடியில் நடந்தது.
கீழ்பவானி பாசன திட்டத்தில், சேதமடைந்துள்ள கொப்பு வாய்க்கால்களை சீரமைக்க, விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கவுந்தப்பாடி பிரிவுக்கு உட்பட்ட, 894 சலங்கபாளையம், கோபி மேற்கு பிரிவுக்கு உட்பட்ட கரட்டுப்பாளையம் கசிவு நீர் திட்டங்களில், திட்ட மதிப்பீடுகளின்படி, விவசாயிகளின் கருத்துக்களை கேட்டு, பராமரிப்பு பணிகளை தரமாக செய்ய வேண்டும்.
பொதுப்பணித்துறையின் பணிகள் செய்யப்படுவதற்கு முன், அந்தந்த பாசன சபை நிர்வாகிகள், விவசாயிகளை, பொதுப்பணித்துறையினர் கலந்து பேசி, விவசாயிகளின் கருத்துப்படி, பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டும். சலங்கபாளையம் கசிவுநீர் திட்ட வாய்க்காலில், தூர்வாரும் பணிகள் செய்யப்படும்போது, வாய்க்காலின் உள்பகுதியில் உள்ள மண்ணை அகற்றி, கரைகளின் மேல்பகுதியிலும், வெளிப்பகுதியிலும் கொட்ட வேண்டும். கீழ்பவானி பாசன திட்டத்தில், அணைகளில் உள்ள நீரின் இருப்பை கருத்தில் கொண்டு, பயிர்களை காப்பாற்றவும், குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும், மூன்று முறை தண்ணீர் வழங்க வலியுறுத்தி, கூட்டமைப்பு சார்பில், மனு கொடுப்பது, என தீர்மானிக்கப்பட்டது.தலைவர் செங்கோட்டையன் தலைமை வகித்தார். செயலாளர் வெங்கடாசலபதி வரவேற்றார். பொருளாளர் குணசேகரன் வரவு, செலவு அறிக்கை வாசித்தார். குப்புசாமி நன்றி கூறினார்.

### எகிறிய வாழை விலை விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: திருமண சீசன், கோவில் திருவிழா உள்ளிட்ட சுப விஷேசங்கள் தொடங்கி யுள்ள நிலையில் வாழைத்தாருக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் "செம' குஷியில்

உள்ளனர்.
கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், லாலாப் பேட்டை மற்றும் குளித்தலை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக காவிரியாற்று பகுதிகளான திருக்காடுதுறை, நடையனூர், சேமங்கி, நொய்யல், மறவா பாளையம், தளவாபாளையம், ஆவராங்காட்டூர், தவுட்டுபாளையம், கட்டிபாளையம் மற்றும் பாலத்துரை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. காவிரியாற்று பகுதிகளில் விளையும் வாழை ருசியாக உள்ளதால் ஈரோடு, திண்டுக்கல், மதுரை, திருச்சி, சேலம், நாமக்கல் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பபடுகிறது.
தை மாதம் தொடங்கி ஆனி மாதம் வரை ஆறு மாதங்களுக்கு திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் களை கட்டும். கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கோவில் திருவிழாக்கள் சிறப்பாக நடந்து வருகிறது. இதனால், கடந்த மாதத்தை விட வாழைத்தாருக்கு கூடுதல் விலை கிடைக்கிறது.
கரூரில் கடந்த மாதம் 300 ரூபாய்க்கு விற்ற பூவன் தார், தற்போது 400 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 200 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், ரஸ்தாளி 250 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், பச்சை நாடான் 150 ரூபாயில் இருந்து 200 ரூபாய்க்கும், மொந்தன் வாழை ஒரு காய் இரண்டு ரூபாயில் இருந்து ஐந்து ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.குறிப்பாக, கோடை வெயிலில் உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும் மொந்தன் வாழைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ""வரும் பங்குனி மாதம் முதல் ஆனி மாதம் வரை வாழைத்தார் விலை மேலும் உயரும்'' என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் அமைச்சு பணியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம்

தஞ்சாவூர்: "வேளாண்மைத்துறையில், அமைச்சு பணியாளருக்கு உடனே பதவியுயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, வலியுறுத்தி, தஞ்சையில், தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சு பணியாளர்கள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சு பணியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம் தஞ்சையில் நடந்தது. இதில், மாநில துணைத்தலைவர் ஜெயகோபி தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாநில பொருளாளர் சுரேஷ்குமார், துணைத்தலைவர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், வேளாண்மைத்துறை அமைச்சு பணியில் கண்காணிப்பாளர் பதவியுயர்வு பட்டியலை அரசு வெளியிடவில்லை.
இதனால், பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பதவியுயர்வுக்கு வாய்ப்பு இருந்தும், பதவி உயர்வின்றியே இதுவரை 10 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். இதனால், 30 வருடம் பணியாற்றி ஓய்வூதிய இழப்புடன் ஓய்வு பெற்றுள்ளனர்.

கண்காணிப்பாளர் பணியிடங்கள் காலியாக இருந்தும், அப்பணியிடத்துக்கு பதவியுயர்வு யாருக்கும் வழங்கப்படாததால் 200 பேர்கள், மாதம்தோறும் நிதிப்பயனை இழந்து வருகின்றனர். எனவே, கண்காணிப்பாளர் பதவியுயர்வு பட்டியலை அங்கீகரித்து உடனே பதவியுயர்வு வழங்க தமிழக அரசும், சென்னை வேளாண்மைத்துறை இயக்குனரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
வேளாண் துறையில் பணி வரன்முறை செய்யப்பட்ட 126 இளநிலை உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டு, பல வருடமாக பணிவரன்முறை செய்யப்படாமல் உள்ள இளநிலை உதவியாளர்களின் பணியை உடனடியாக வரன்முறை செய்ய வேண்டும்.
வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் போதுமான, அமைச்சு பணியிடங்கள் இல்லாததால், அலுவலகத்தில் பட்டியல் மாற்றம் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே, அமைச்சு பணியிடங்களை உருவாக்கி, அமைச்சு பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அடுத்த மாதம் (மார்ச்) நான்காம் தேதி, சென்னை இயக்குனரகத்தின் முன்பு, காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திருவாரூரில் 2.50 லட்சம் ஏக்கரில் பயறு வகை பயிர் சாகுபடி இலக்கு

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலுள்ள சீராளத்தூர் கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் பயறு வகை பயிர்களில் ஒட்டுமொத்த கரைசல் தெளிக்கும் பணி துவக்க நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது.
இதில், கலெக்டர் நடராஜன் பங்கேற்று, பணிகளை துவக்கி வைத்து பேசியதாவது:
உணவு உற்பத்தி இயக்கத்தின்கீழ், திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு, கோடை பருவத்தில் 2 லட்சத்து, 50 ஆயிரம் ஏக்கரில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இதில், பயறு வகை பயிர்கள் இதுவரை ஒரு லட்சத்து ஆயிரத்து 807 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. மகசூலை அதிகரிக்க இலை வழியாக டி.ஏ.பி., உரம் தெளிப்பு முறை பின்பற்றப்படும். இத்திட்டத்தின் கீழ் உரிய தொழில்நுட்ப முறைகளை அறிந்து, விவசாயிகள் பயன்பெற வேண்டும்.
தண்ணீர் தெளிப்பு கருவி, நீர்ப்பாசன கருவி, மழை நீர் கருவி ஆகியவற்றை 50 சதவீதம் மானியத்தில் வேளாண்மைத்துறை மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் பயிர் பாதுகாப்பு கருவிகள், மருந்துகள், கைத்தெளிப்பான், நுண்சத்து பொருட்கள் உள்ளிட்டவை 50 சதவீத மானியத்தில்

வழங்கப்படும். ஆயில் இன்ஜின் வாங்க 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். தார்ப்பாய் வாங்க 50 சதவீத மானியம் அளிக்கப்படும். இத்தகைய அரசின் திட்டங்களை, விவசாயிகள் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

**வேடசந்தூர் பகுதி மக்களுக்கு நம்பிக்கை தந்த மழை சாரல்**

வேடசந்தூர்: வறண்ட நிலையில் காணப்பட்ட வேடசந்தூர் பகுதியில் நேற்று முன்தினம் பெய்த லேசான சாரல் மழை மக்களுக்கு நம்பிக்கை தந்துள்ளது. மாவட்டத்தில் வேடசந்தூர் தாலுகா மிகவும் வறட்சியான பகுதியாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சரியான மழை இல்லை. தற்போது அடித்து வரும் வெப்பத்தின் அளவு 33 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து பல ஆழ் குழாய் கிணறுகள் வறண்டு விட்டன. குடிநீர் பிரச்சனை அதிகமாக உள்ளது.இந்த நிலையில் நேற்று முன்தினம் ஆறு மாத இடைவெளிக்கு பின் மழை தூறல் விழுந்தது மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. வேடசந்தூர் தாலுகா அலுவலகத்தில் 3.14 மி.மீட்டரும், புகையிலை ஆராய்ச்சி மையத்தில் 3.06 மி.மீ, குடகனாறு அணைப்பகுதியில் 2 மி.மீட்டர் மழையும் பதிவாகியது. நீண்ட இடை வெளிக்கு பின் மழை சாரல் விழுந்ததை அடுத்து தற்போது அதிகமாக பனி பொழிவு இருப்பதால் இனி மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் மக்கள் உள்ளனர்.

**தாண்டிக்குடியில் 13.மி.மீ., மழை**

தாண்டிக்குடி,: தாண்டிக்குடியில் நேற்று முன்தினம் இரவு, ஒரு மணி நேரம் மழை பெய்தது.பருவ மழை பொய்த்து கடந்த சில மாதங்களாக வறண்ட வானிலையுடன், பனியின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த வாரம் முதல் வானம் மேக மூட்டத்துடனும், அவ்வப்போது சாரல் மழையும் பெய்தது.

நேற்று முன்தினம் இரவு சாரலுடன் துவங்கி மிதமான மழை 1 மணி நேரம் பெய்தது. தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் பரவலாக மழை பெய்தது. இம்மழை காரணமாக தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதிகளில் மின்வினியோகம் பாதித்து விடிய, விடிய இருளில் மூழ்கின. அதிகபட்சமாக தாண்டிக்குடியில் 13 மி.மீ., மழை பதிவாகியது. தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தற்போதைய மழை குறுவிவசாயப் பயிர்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**இரண்டாம் போக நெல் சாகுபடி முழுமையாக.. கருகும் தென்னை... கலங்கும் விவசாயிகள்**

தேனி: தேனி மாவட்டத்தில், இரண்டாம் போக நெல் சாகுபடி தண்ணீரின்றி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தென்னை மரங்கள் கருகி வருவதால், கலங்கிய விவசாயிகள், வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், என வலியுறுத்தி உள்ளனர். மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையும், தென்மேற்கு பருவமழையும் பொய்த்து விட்டது. ஆண்டு சராசரியை விட, நடப்பு ஆண்டில் 55 சதவீதம் குறைவாக மழை பெய்துள்ளது. நிலத்தடி நீரும் வறண்டு விட்டது. மின்பற்றாக்குறையால், மின்மோட்டார்களையும் பயன்படுத்த முடியவில்லை. இதனால், முதல் போக நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, சாகுபடி கைக்கு வந்து சேரவில்லை. இரண்டாம் போக சாகுபடிக்கு தேவையான தண்ணீரும் இல்லாததால், நெற்பயிர்கள் கருகி வருகிறது. முல்லை பெரியாற்று பாசனத்தை நம்பி உள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலமும் வறண்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள 135 கண்மாய்களிலும் தண்ணீர் இல்லை. இந்த கண்மாய் பாசனத்தை நம்பியுள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் வறண்டு கிடக்கின்றன. இதனால், இரண்டாம் போக நெல் விளைச்சல் கை சேராது, என்பது உறுதியாகி விட்டது. எனவே, விவசாயிகள் கலங்கிப்போய் உள்ளனர். தென்னை மரங்கள் வறட்சியால் கருகத் தொடங்கி உள்ளன. இந்நிலை ஒரு மாதம் நீடித்தால் மா மரங்களும் கருகி விடும். தோட்ட விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தேனி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.தேனி மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் கூறியதாவது: விவசாயிகள் கடனை கட்டுவதா, கண்களில் வழியும் கண்ணீரை துடைப்பதா, எனத் தெரியாமல் தவிக்கின்றனர். கடன் கொடுத்த வங்கிகள், விவசாயிகள் கடனை திரும்ப செலுத்தவில்லை, எனக்கூறி அவர்களது சொத்துக்களை ஏலம் விட நோட்டீஸ் அனுப்பி வருகின்றன. மாவட்டத்தில் இவ்வளவு வறட்சி நிலவியும், வறட்சி பற்றிய புள்ளி விவரங்கள் இன்னமும் சேகரிக்கப்படவில்லை. இரண்டு போகமும் பாதிக்கப்பட்டு, கலங்கி நிற்கும் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு, தேவையான உதவிகளை வழங்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### 7500, ஏக்கரில் மிளகாய் கருகியதால் நஷ்டம் நிவாரணத்திற்கு ஏங்கும் சாயல்குடி விவசாயிகள்

சாயல்குடி: சாயல்குடி போதிய மழையின்றி, 7,500 ஏக்கரில் பயிரிடப்பட்ட மிளகாய் பழுக்கும் நிலையில் செடியிலேயே கருகியதால், 12 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம்

ஏற்பட்டுள்ளது. தண்ணீரின்றி ஏற்பட்ட இந்த நஷ்டத்தால், கண்ணீர் விடும் விவசாயிகள், அரசு நிவாரணமாவது கிடைக்குமா என ஏக்கத்தில் உள்ளனர்.

சாயல்குடி அருகே உச்சிநத்தம், செவல்பட்டி, செஞ்சடைநாதபுரம், டி.எம்.கோட்டை, ஒச்சத்தேவன்கோட்டை, கரிசல்குளம் உள்ளிட்ட 12 கிராமங்களில் 7,500 ஏக்கரில் குண்டு மிளகாய் பயிரிடப்பட்டது. போதிய மழை இல்லாததால், மூன்று, நான்கு முறை பழம் பறிக்கும் இடத்தில், ஒருமுறை கூட பறிக்க முடியவில்லை. அதற்குள், செடிகள் கருகிவிட்டன. 12 கோடி ரூபாய்க்கும் மேல், நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மிளகாய்க்கும் வறட்சி நிவாரணம் கிடைக்குமா என இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஒச்சத்தேவன்கோட்டை முருகவேல்: கடந்த நான்கைந்து ஆண்டுகளாக, மிளகாய் விளைச்சல் இல்லை. இருந்தும், விளையும், என்ற, நம்பிக்கை குறையாது, கந்து வட்டிக்கு வாங்கி செலவு செய்ததால், இந்தாண்டும் மழையின்றி விளைச்சல் இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எங்களை இயற்கையும் ஏமாற்றுகிறது. காப்பீடு வழங்குகிறோம் என, அரசும் ஏமாற்றுகிறது. வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும், என்றார்.

விவசாய சங்க தலைவர் பழனிகுமார்: தொடர்ந்து மழை பொய்த்து போனதால், மித மழை பயிரான மிளகாய் கூட விளைவது கேள்விக்குறியாகி வருகிறது. காப்பீடு பணமும் வழங்காததால், விவசாயிகள் பெரும் ஏமாற்றத்தில் உள்ளனர். இதனால், மிளகாய் பயிரிட்ட இடங்களில் கம்பு, சோளம் உள்ளிட்ட நவதானியங்கள் பயிரிட்டு வாழ்வாதாரம் காக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர், என்றார்.

## 10 ஏக்கர் நெற்பயிர் கருகியது

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கும்பப்பூ நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது. பெரும்பாலான பகுதிகளில் அறுவடை பணிகள் நிறைவு பெற்றுள்ளன. அணைகளில் பேதிய தண்ணீர் இருப்பு உள்ளநிலையில் தண்ணீர் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தெங்கம்புதூர் பகுதியில் சானல் பாசன இடங்களில் போதிய தண்ணீர் கிடைக்காமல் சுமார் 10 ஏக்கர் பரப்பில் நெற்பயிர்கள் போதிய விளைச்சல் இல்லாமல் காணப்படுகின்றன. பயிருக்கு தண்ணீர் கிடைக்காத காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். இனி தண்ணீர் திறந்து விட்டாலும் எந்த பயனும் இல்லை. தற்போது தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 11.95 அடியாக இருந்தது. அணைக்கு 450 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், அணையில் இருந்து 679 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. பெருஞ்சாணியில் 41.70 அடியாக நீர்மட்டம் இருந்தது.

அணையில் இருந்து 150 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. சிற்றார்-1ல் 4.10 அடியும், சிற்றார்-2ல் 4.20 அடியும், பொய்கையில் 3.80 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 49.87 அடியும் நீர்மட்டம் உள்ளது. சிற்றார்-1ல் இருந்து 112 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் இருந்து வினாடிக்கு 30 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருச்சி அருகே கிணறுகளில் திடீர் நீர்ப்பெருக்கு



**திருச்சி:** திருச்சி மாவட்டம் முசிறி அருகே வறண்டு கிடந்த கிணறுகளில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. துளையாநத்தம் கிராமத்தில் நாகராஜன் உள்ளிட்ட 7 பேர் கிணறுகளில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல ஆண்டாக வறண்டு கிடந்த கிணறுகளில் திடீரென 10 முதல் 15 அடி நீர் ஊறியதால் கிராம மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். திடீர் மாற்றத்துக்கான காரணத்தை நிபுணர் மூலம் ஆராய விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

### 9,139 ஏக்கரில் குங்குமப்பூ சாகுபடி

**காஷ்மீர்**: ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சுமார் 9,139 ஏக்கரில் குங்குமப்பூ சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 4,611 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி மறு சாகுபடி செய்ததில் 2.47 ஏக்கருக்கு 2 கிலோவில் இருந்து 4 கிலோ குங்குமப்பூ மகசூல் கிடைக்கிறது என அந்த மாநில கால்நடைத்துறை அமைச்சர் நசீர்குர்ஷி சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

**பெரிய வெங்காயம் விலை சரிவு**

**சேலம்,** : சேலத்தில் பெரிய வெங்காயம் விலை ரூ4 வரை குறைந்து கிலோ ரூ14க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சேலம் மார்க்கெட்டிற்கு சோலாப்பூர், கோலாப்பூர், பெல்லாரி, பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் இருந்து பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்கள் பெரிய வெங்காய சீசனாகும். இந்தியாவில் இருந்து அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கும் பெரிய வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் ரூ70க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் வரத்து அதிகரிப்பால் படிப்படியாக விலை குறைந்து கடந்த வாரத்தில் கிலோ ரூ18 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் அளவு குறைந்துள்ளதால் கிலோவிற்கு ரூ4 வரை மேலும் விலை குறைந்துள்ளது. தற்போது பெரிய வெங்காயம் கிலோ ரூ14க்கு விற்பனை செய்யப்படுகிறது. 50 கிலோ கொண்ட மூட்டை ரூ550 முதல் ரூ600 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**கத்தரிக்காய் விலை சரிவு கிலோ ரூ3க்கு விற்பனை**

**ஊத்தங்கரை, :** ஊத்தங்கரை மார்க்கெட்டில் கத்தரிக்காய் கிலோ ரூ3க்கு விற்பனையானது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் உள்ள தினசரி காய்கறி மார்க்கெட்டிற்கு வெளியிடங்களில் இருந்து காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுவது வழக்கம். தற்போது, உள்ளூர் காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி கத்திரிக்காய் கிலோ ரூ3க்கு விற்பனையானது. பீன்ஸ் கிலோ ரூ25 க்கும், கேரட் கிலோ ரூ15க்கும், பீட்ரூட்

ரூ10க்கும், கோஸ் ரூ5க்கும், வெண்டை ரூ20க்கும், முருங்கைக்காய் கிலோ ரூ40க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தக்காளி விலை நாளுக்கு நாள் சரிந்து வருவதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். நேற்று காலை கிலோ தக்காளி ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. அறுப்பு கூலிக்கு கூட விலை கட்டுப்படியாகாததால் தக்காளியை செடிகளிலேயே விட்டு விடுகின்றனர்.

## 24,500 மூட்டை பருத்தி ரூ5.50 கோடிக்கு ஏலம்

**ஆத்தூர், :** ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் வாரம் தோறும் திங்கட்கிழமையில் பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்த ஏலத்தில் சேலம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் பருத்திகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதை சேலம், திருப்பூர், கோவை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள நூல்மில் அதிபர்கள் ஏலத்தில் நேரடியாக கலந்து கொண்டு வாங்கி சென்றனர். நேற்று நடைபெற்ற ஏலத்தில் 24 ஆயிரத்து 300 மூட்டைகள் ரூ5.50 கோடிக்கு விற்பனையானது. ஆர்சிஎச் ரகம் குவிண்டால் ரூ4 ஆயிரத்து 589 முதல் ரூ5 ஆயிரத்து 469 வரையிலும், டிசிஎச் ரகம் ரூ6 ஆயிரத்து 211 முதல் ரூ7 ஆயிரத்து 569 வரையிலும் விற்பனையானது. டிசிஎச் ரக பருத்தியின் விலை குறைவாக விற்பனையானதால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

## திருச்சியில் 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திருச்சி,:** திருச்சியில் வரும் 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் 28ம் தேதி (வெள்ளி) நடைபெறுகிறது. விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளாண் தொடர்புடைய கடனுதவிகள்

குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**மானாவாரியில் பருத்தி பயிரிட ஆலோசனை**

**பழநி, :** பழநி பகுதியில் மானாவாரியில் பருத்தி பயிர் செய்து கூடுதல் மகசூல் பெறுவது குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

மானாவாரியில் பருத்தி பயிரிட எல்ஆர்ஏ 5166, சுமங்கலா கே 11, எஸ்விபிஆர் 2, கேசி 2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45க்கு 15 செ.மீ இடைவெளியில் பாத்தி அமைத்து ஹெக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைகளை விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைக்க வேண்டும். ஹெக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடி உரமாக இட்டால், வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். விளைச்சல் அதிகரிக்கும்.

பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்பேது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும் போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும்.

களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளிக்க வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின்பு உரமிட வேண்டும்.

கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பயிற்சி முகாம்**

**திருப்புத்தூர், :** திருப்புத்தூர் அருகே உள்ள பூலாங்குறிச்சி வ.செ.சிவ.அரசு கலைக்கல்லூரியில் உணவுக் காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றத்தின் நிதியுதவியுடன் கூடிய மூன்று

நாட்கள் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சிக்கு கல்லூரி முதல்வர் வீரப்பன் தலைமை வகித்தார்.

சிறப்பு பயிற்றுனராக துறைதலைவர் பன்னீர்செல்வம் செயல்பட்டார். உணவுக் காளான் வளர்ப்பு மற்றும் அதில் உள்ள தொழில் நுட்பங்கள் குறித்து காணொளி காட்சி மற்றும் செய்முறை பயிற்சி மூலம் விளக்கமளிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், மாணவ, மாணவிகள், கல்லூரி போராசிரியர்கள் பங்கேற்றனர்.நான்கு நாட்கள் நடந்த மண்புழு உர தயாரிப்பு பற்றிய பயிற்சி முகாமிற்கு கல்லூரி முதல்வர் வீரப்பன் முன்னிலை வகித்தார். ஸ்ரீ அம்மன் பயோகேர் நிறுவனத்தை சேர்ந்த செந்தில்குமார் சிறப்பு பயிற்றுனராக செயல்பட்டார். மண்புழு உரம் தயாரிப்பு மற்றும் தொழில் நுட்பங்கள் காணொளி காட்சி மற்றும் செய்முறை பயிற்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

**வீரிய ஒட்டு ரக விதைகளை விவசாயிகள் உற்பத்தி செய்யலாம்**

**காரைக்குடி,** :வீரிய ஒட்டுரக விதைகளை விவசாயிகள் தங்கள் நிலங்களிலேயே தயார் செய்து கொள்ளலாம் என மதுரை வேளாண் கல்லூரி தோட்டக்கலை துறை தலைவர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

காரைக்குடி அருகே செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள், தோட்டக்கலை துறை அதிகாரிகளுக்கு வீரிய ஒட்டுரக விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் சுவாமிநாதன் வரவேற்றார். மதுரை வேளாண் கல்லூரி தோட்டக்கலை துறை தலைவர் சுவாமிநாதன் தலைமை வகித்து பேசுகையில், மாவட்டத்தில் சாலூர், பெரியகோட்டை, கீழப்பூங்குடி, திருவேலங்குடி, அரியக்குடி பகுதிகளில் 600 ஹெக்டேருக்கு மேல் காய்கறி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியை அதிகரிக்க வீரிய ஒட்டு ரக விதைகளை தனியாரிடம் கொள்முதல் செய்வதால் அதிகம் செலவாகிறது.

இதனால் ஆண், பெண் செடிகளை தனித்தனியாக வளர்த்து அதன் மூலம் வீரிய ஒட்டுரக விதைகளை தயார் செய்து கொள்ளலாம். ஒருவருக்கு சராசரியாக 320 கிராம் காய்கறி தேவை. ஆனால் 120 கிராம் மட்டுமே கிடைக்கிறது. மொத்த பரப்பில் 12 சதவீதம் மட்டுமே காய்கறி விளைவிக்கப்படுகிறது. வீரிய ஒட்டு ரக விதைகளை பயன்படுத்தும் போது உர நிர்வாகம், நீர் மேல £ண்மையை முறையாக கடைபிடித்தால் மட்டுமே எதிர்பாத்த விளைச்சல் கிடைக்கும் என்றார். சாக்கோட்டை வேளாண் உதவி

இயக்குனர்கள் மணிவண்ணன், சாந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். இணை பேராசிரியர் ராமர் நன்றி கூறினார்.

**பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பண்ணை உத்திகள்**

**உடுமலை, :** உடுமலை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் இளங்கோ கூறியதாவது:

தோட்டக்கலை பயிர் சாகுபடியுடன் ஒருங்கிணைந்த பண்ணை உத்தி தான் லாபம் தரும். இதற்கு உபதொழில்களாக மண்புழு வளர்ப்பு, தேனீ, காளான் வளர்ப்பு, ஆடு, மாடு, முயல், பன்றி, பட்டுப்புழு, வாத்து, கோழி, மீன் வளர்ப்பு, வேளாண் காடுகள், சாண எரிவாயு கலன், சூரிய ஒளி ஆதாரங்கள் பயன்பாடு மூலம் காய வைத்து விற்க உகந்த வற்றல் வகை, பழச்சாறு, ஜாம். ஜெல்லி தயாரிப்பு, பண்ணை குட்டை அமைத்தல் தீவன பயிர் சாகுபடி செய்தல் ஆகியவை ஒருங்கிணைந்த பண்ணை உத்திகளை விவசாயிகள் பின்பற்றலாம்.

இயற்கை வேளாண் உத்தியும் இத்தகைய உத்திகளால் எளிதில் சாத்தியமாகும் அங்கக சான்று மூலம் உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் சான்று பெறலாம். இதன் மூலம் இயற்கை அங்காடிகளில் தனது விளைபொருட்களை விற்க வழி உள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணை திட்டம் பராம்பரிய  முறையின் நவீன உத்திகளையும் வேளாண் தோட்டக்கலை சார்பு தொழில்களை ஊக்குவிக்கும் உத்தியாகும். ஒவ்வொரு விவசாயியும் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலத்தில் ஒருங்கிணைந்த முறைகள் கையாள தற்போது அவசியமாகும்.

இத்தகைய உத்திகளால் தான் அதிக லாபம் பெற முடியும். ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு, நிலையான வருமானம், நீடித்த வேளாண் பண்ணை கழிவுகள் முறையாக பயன்படுத்துதல், தரமான விளைபொருள் உற்பத்தி மூலம் வாழ்வாரத்தை மேம்படுத்தி கொள்ளலாம் என்றார்.

**புதுகை மாவட்டத்தில் ரூ.2.14 கோடியில் 3 சேமிப்பு கிடங்குகள் வீடியோ கான்பரன்சிங்கில் முதல்வர் திறந்து வைத்தார்**

**புதுக்கோட்டை, :** புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் புதிதாக அமைக்கப்பட்ட 3 பொதுவிநியோகத் திட்ட சேமிப்புக் கிடங்குகளை தமிழக முதல்வர் நேற்று வீடியோகான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை அடுத்த ரெங்கம்மாள்சத்திரம் சிப்காட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில ரூ.46.02 லட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட பொது விநியோக திட்ட சேமிப்புக் கிடங்கினை முதல்வர் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்ததையொட்டி கலெக்டர் மனோகரன் பொதுமக்கள் மற்றும் பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கி பேசி னார். அப்போது, முதல்வர் ஏழை, எளிய விவசாய மக்களின் நலனை கருத்தில் கொண்டு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை பாதுகாப் பாக வைக்கும் பொருட்டு பல்வேறு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சேமிப்புக் கிடங்குளை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 வட்டங்களில் 8 சேமிப்பு கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. அதில் ரெங்கம்மாள்சத்திரம் சிப்காட்டில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1989ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள பொது விநி யோக சேமிப்புக் கிடங்கு ரூ.46.02 லட்சம் மதிப்பில் 1000 டன் கொள்ளவு கொண்ட கூடுதல் பொதுவிநியோக திட்ட பொருட்கள் சேமிக்கும் கூடுதல் சேமிப்பு கிடங்கினையும், இலுப்பூரில் ரூ.85 லட்சம் மதிப்பில் 1500 டன் கொள்ளவு கொண்ட புதிய சேமிப்பு கிடங்கினையும், குளத்தூரில் ரூ.83.02 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய சேமிப்புக் கிடங்கினையும் தமிழக முதல்வர் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார். மேலும் கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட பொது சேவை மையத்தினையும் முதல்வர் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்த பொது சேவை மையம் மூலம் பொதுமக்கள் தங்களுடைய வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், ஜாதிச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்துச் சான்றிதழ்களையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பொது சேவை மையத்தினை பயன்படுத்தி வேண்டிய சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம் என்றார். இந்நிகழ்ச்சியில் எம்எல்ஏ கார்த்திக்தொண்டைமான், டிஆர்ஓ மாரி முத்து, மாவட்ட ஊராட்சித்தலை வர் ராமையா, மண்டல மேலாளர் சுகு மாரன், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (பொது) முத்து மாரி, கலெக்டர் அலுவலக மேலாளர் (நீதியியல்) வேலுமணி, மாவட்ட தகவலியல் அலுவலர் தமிழ்ச்செல்வன், தாசில்தார் கோவிந்தராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**புதுகை மக்களை குளிர்வித்த சாரல் மழை**

**புதுக்கோட்டை, :** புதுக் கோட்டையில் நேற்று பெய்த சாரல் மழையில் வெப்பம் தணிந்து இதமான காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.
புதுக்கோட்டை மாவட் டம் முழுவதும் பருவமழை பொய்த்து போனதால் எங்கும் வறண்ட நிலையே காணப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள குளங்களில் தண்ணீர் இல்லாமலும், விவசாய நிலங்களில் புல் கூட கருகியபோய் உள்ளது. வழக்கமாக தை மாத காலங்களில் நெல் அறுவடை பணிகள் தீவிரமாக இருக் கும். ஆனால் வானம் பார்த்த பூமியான புதுக் கோட்டையில் மழையை மட்டுமே நம்பியுள்ள விவசாயிகள் பயிர் சாகுபடி செய்யா மல் கூலி வேலைகளுக்கு சென்றுவரும் அவலநிலை தொடர்ந்து வருகிறது. ஆழ் துளை கிணறு வைத்துள்ள ஒரு சில விவசாயிகள் மட்டும் தற்போது விவசாயம் செய்து வருகின்றனர். பருவமழையும் இல்லாமல், விவசாயமும் இல்லாமல் மாவட்டம் முழுவதும் வறட்சியின் பிடியில் சிக்கி தவித்து வருகிறது. பல இடங்களில் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வரும் சூழ்நிலை உள்ளது.
இந்நிலையில் நேற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாக காலையிலிருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு, திடீரென சாரல் மழைய பெய்யத் துவங்கியது. அவ்வப்போது, விட்டு, விட்டு தூறிய மழையினால் புதுக் கோட்டை முழுவதும் குற்றா லம், கொடைக்கானலுக்கு ஈடாக இதமான குளிர்ந்த நிலை இருந்தது. கடந்த பல மாதங்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகமானதால் அவதிப்பட்டு வந்த மக்கள் நேற்று பெய்த சாரல் மழை யினால் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் வறண்டு கிடக்கும் விவசாய நிலங்களில் கருகிய புற்கள் கூட செழிப்படைய வாய்ப்புள் ளது, கால்நடைகள் மேய்ச் சலுக்கு இந்த சாரல் மழை உதவும் என விவசாயிகள் சிறிது ஆறுதல் அடைந்தனர். நேற்று காலை முதல் மாலை வரை இதமான காற்றுடன் பெய்த சாரல் மழையில் பெரியவர்கள் முதல் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் வரை அனைவரும் மழையை ரசித்தபடி நனைந்து சென்றனர்.

**வெப்பத்தை குறைத்த மழையால் மகிழ்ச்சி**

**திருமயம், :** திருமயம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் நேற்று காலை 9 மணியளவில் திடீரென மழை பெய்து குளிர்ச்சியான சூழ்நிலையை உருவாக்கியது.
கடந்த சில நாட்களாக திருமயம் பகுதியில் வெயில் கொளுத்தியதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இந்நிலையில் நேற்று காலை 9 மணியளவில் திருமயத்தில் திடீர் மழை பெய்து வீதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. வெப்பம் நீங்கி குளிர்

காற்று வீசியது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் தொடர்ந்து மாலை வரை மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

### பூம்புகாரில் இலவச மீன் வளர்ப்பு பயிற்சி நிறைவு

**பூம்புகார், :** நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒருவாரம் நடைபெற்ற இலவச மீன்வளர்ப்பு பயிற்சி நிறைவு பெற்றது.
பூம்புகார் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மயிலாடுதுறை இண்டியன் ஓவர்ஸீஸ் வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி, கடந்த 15ம்தேதி துவங்கி ஒரு வாரம் நடைபெற்றது.
நேற்றுமுன்தினம் நடந்த பயிற்சியின் நிறைவு விழாவுக்கு, காவிரிப்பூம்பட்டினம் இந்தியன் ஒவர்ஸீஸ் வங்கி மேலாளர் கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் முன்னிலை வகித்தார்.
பூம்புகார் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வராசு வரவேற்றார்.
விழாவில் பயிற்சி பெற்ற 30 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இதில் பூம்புகார், மேலையூர், நெய்தவாசல், புதுக்குப்பம், நாயக்கர்குப்பம், கீழப்பெரும்பள்ளம், மேலப்பெரும்பள்ளம் மற்றும் பல பகுதி களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஆராய்ச்சியாளர் கணபதிராமன் நன்றி கூறினார்.

### மழை இல்லாததால் விவசாய தொழிலாளர்கள் வேலையின்றி பரிதவிப்பு

**தேவாரம், :** கம்பம் பள்ளத்தாக்கில் போதிய மழை இல்லாமல் விவசாயம் முடங்கியுள்ளதால், விவசாய கூலி தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கின்றனர்.
கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம்போக நெல் சாகுபடிக்காக நாற்றுகள் நடப்பட்டுள்ளன. போதிய மழை இல்லாமல், பயிர்கள் கருகி வருகின்றன. பெரியாறு அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென சரிந்ததை புரிந்து கொண்ட விவசாயிகள், தங்களது போராட்டத்தை கைவிட்டனர். மழை இல்லாததால் தேனி மாவட்டத்தில் சுமார் ரூ.15 கோடி அளவில் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதனால் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.
இரண்டாம் போக நெல் விவசாயத்திற்காவது மழை பெய்திருந்தால் விவசாயிகள்

உரமிடுதல், களை எடுத்தல், உள்ளிட்ட பணிகளுக்காக விவசாய கூலித் தொழிலாளர்களை அழைத்திருப்பார்கள். இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். ஆனால் தற்போது மழை இல்லாமல் போனதால், கம்பம் பள்ளத்தாக்கில் விவசாயப் பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன. தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட பகுதிகளை சுற்றிலும் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மானாவரி பயிர்களும் கருகிவிட்டன. காய்கறி பயிர்கள் வளரவில்லை. இதனால் விவசாய கூலி தொழிலாளர்கள் வேலையின்றி பரிதவிக்கின்றனர். மாற்று வேலைக்கும் செல்ல முடியவில்லை. ஊரின் பொது இடங்களில் அமர்ந்து பொழுதை கழித்து வருகினறனர். மழை இல்லாமல் போனது விவசாயிகளுக்கு ஒருபுறம் நஷ்டம் என்றால், மறுபுறம் கூலி தொழிலாளர்கள் வேலையின்றி கவலையில் மூழ்கி உள்ளனர். இதுகுறித்து கூலி தொழிலாளர்கள் கூறுகையில், `காய்கறி, மானாவாரி உள்ளிட்ட எந்த விவசாயப்  பணிகளும் தற்போது நடக்கவில்லை. கம்பம் பள்ளதாக்கில் விவசாய பணிகள் முடங்கிப்போய் விட்டது. இதனால் எங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. வேலைக்காக மில்கள் அதிகம் உள்ள கோவை, திருப்பூர் உள்ளிட்ட வெளியூர்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. மழை பெய்தால்தான் வேலைகிடைக்கும் என்ற நிலை உருவாகி விட்டது என்றனர்.

**28ம்தேதி கடைசி விவசாயிகள் நஷ்டத்தை தவிர்க்க பயிர் காப்பீடு செய்யுங்க வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள்**

**திருச்சுழி, :** திருச்சுழி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்ய வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ள னர்.

நரிக்குடி வட்டாரத்தில் 80 சதவீதம் விவசாய நிலங் கள் மானாவாரி நிலங்களா கும். நடப்பாண்டில் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தினால் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் கருகி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த மகசூல் இழப்பினை ஈடுகட்டும் பொருட்டு, விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயனடையுமாறு நரிக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் துரைக்கண்ணம்மாள் தெரிவித்துள்ளார். நரிக்குடி, வீரசோழன் மற்றும் அ.முக்குளம் பகுதி விவசாயிகள் எள்ளுக்கு ஏக்கருக்கு 246 ரூபாய் காப்பீட்டு பிரீமியமாக அந்தந்த பகுதிகளில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் செலுத்தி காப்பீடு செய்து கொள்ள

அறிவுறுத்தப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பிரீமியம் செலுத்த கடைசி தேதி பிப்ரவரி 28 ஆகும்.

மேலும் காப்பீடு செய்யும் விவசாயிகள் நிலத்தின் பட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக நகல், குடும்ப அட்டை நகல் ஆகியவற்றை எடுத்து செல்ல வேண்டும். மேலும் விபரங்களுக்கு காப்பீடு நிறுவன மூத்த அலுவலர் கண் ணனை 97911 23984 எண்ணில் தொடர்பு கொண்டு பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் ரூ3.81 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்**

**நாமகிரிப்பேட்டை**, : நாமகிரிப்பேடடை ஒன்றியத்தில் ரூ3.81 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது.நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் மத்துருட்டு, நாரைக்கிணறு, முள்ளுக்குறிச்சி, பெரியகுறிச்சி, பெரிய கோம்பை ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இயற்கை வள மேம்பாட்டு பணிகள், பண்ணை வள மேம்பாட்டு பணிகள் மற்றும் நீர்வடிப்பகுதி சுய உதவிக்குழுவிற்கு சுழல் நிதி, இடுபொருள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு விரிவாக்க அலுவலர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் ராமசந்திரன், ஜோதிமணி, பொறியாளர் பூபதி முன்னிலை வகித்தனர். ஒன்றியக்குழு தலைவர் பொன்னுசாமி கலந்து கொண்டு இடுபொருட்கள், சுழல்நிதியை வழங்கினார். ரூ2.05 லட்சம் மதிப்பிலான வீரிய மக்காச்சோளம், ரூ1.76 லட்சம் மதிப்பிலான தீவன சோளம் மற்றும் 24 சுயஉதவிக்குழுக்களுக்கு தலா ரூ25,000 சுழல்நிதி வழங்கப்பட்டது.

**மக்காசோளத்தில் அதிக மகசூல் பெறலாம்**

**சேதுபாவாசத்திரம், :** சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

கோடையில் நெல் சாகுபடியை தவிர்த்து பயறுவகை பயிர்கள் மற்றும் மக்கா சோளம் சாகுபடி செய்து குறைந்த தண்ணீர் செலவில் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண் டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி

என்ற உயிரி யல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்ய வேண்டும். 1 ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி)கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின்பு 60 ஜ் 20 செ.மீ இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செ.மீ செடிக்கு செடி 20 செ.மீ இடைவெளி யில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு ச.மீ 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32240 செடிகளும் இருக்கு மாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். விதைப்புக்கு முன் 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரமிட்டு நடவு வயலில் 1 ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ் போ பாக்டீரி யா உயிர் உரங் களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலு டன் கலந்து இடவேண்டும். குருத்து புழு தாக்குதலை கட்டுப்படுத்திட செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குரு னை மருந்தினை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதை த்த 20 வது நாள் இடவேண் டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். பூக்கும் தருணத் தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த் துக் கொள்ள வேண்டும்.

## நாட்டுப்படகில் அதிக திறன்கொண்ட இன்ஜின் பொருத்தி மீன்பிடிக்க தடை விதிக்க வேண்டும்

**ராமநாதபுரம், :** நாட்டுப்படகுகளில் அதிக குதிரை சக்தி திறன்கொண்ட இன்ஜின் பொருத்தி மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் என பாம்பன் விசைப்படகு மீன்பிடி தொழிலாளர் நல சங்கத்தினர் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம், பாம் பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் விசைப்படகு, நாட்டுப்படகு, கட்டுமரத்தை பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். மீன் இனங்களை பாதுகாக்கவும், அதன் உற்பத்தியை பெருக் கும் பொருட்டும் விசைப்படகுகள் வருடத்தில் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை மீன்பிடிக்க அரசால் தடை விதிக்கப்படுகிறது.

இந்த நாட்களில் விசைப்படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல மீன்துறை அனுமதி அளிப்பது இல்லை. அதிக குதிரை சக்திதிறன் கொண்ட நாட்டுப்படகுகளுக்கு மீன்பிடி தடை விதிக்க வேண்டும் என விசைப்படகு மீன்பிடி தொழிலாளர்கள் நல சங்க நிர்வாகி

பாக்கியம் உள்ளிட் டோர் கலெக்டர் நந்தகுமாரிடம் நேற்று மனு அளித்தனர்.மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசு தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்த மீன்பிடிப்பதை தடுக்க வேண்டும். விசைப்படகு மீனவர்களுக்கு கடலில் மீன்பிடிக்க மீன்துறையினர் டோக்கன் வழங்குவது போல நாட்டுப்படகு மீனவர்களுக்கும் டோக்கன் வழங்க வேண்டும். நாட்டுப்படகு மீனவர்களும் ஏப்.15 முதல் மே 29 வரை மீன்பிடிக்க தடை செய்ய வேண்டும். விசைப்படகில் பயன்படுத்தும் அதிக குதிரை திறன் கொண்ட 15 ஹெச்.பி. முதல் 120 ஹெச்.பி வரை இன்ஜின்களை பயன்படுத்தி நாட்டுப்படகில் மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும். சட்ட விதிமுறைகளுக்கு முரணாக செயல்படும் நாட்டுப்படகுகளை பறிமுதல் செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**கமுதி பகுதியில் திடீர் மழை**

**கமுதி, :** கமுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று அரை மணி நேரம் திடீர் மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். பருவமழை பொய்த்து விட்டதால் கமுதி பகுதியில் உள்ள கண்மாய்கள், குளங்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்து விட்டது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் கால்நடைகள் குடிக்க தண்ணீர் இன்றி அவதிப்பட்டு வருகின்றன.இந்நிலையில் நேற்று காலை திடீரென கமுதி, கோட்டைமேடு, பசும்பொன், அபிராமம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. அரை மணி நேரம் பெய்த இந்த மழையால், வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. மேலும் நேற்று பகல் முழுவதும் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. இந்த திடீர் மழையால் கமுதி மற்றும் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சிய டைந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஜனவரி மாதத்தில் முந்திரி இறக்குமதி 70 சதவீதம் குறைந்தது**



கொச்சி

முந்திரி கொட்டைகள் இறக்குமதி ஜனவரி மாதத்தில் 70 சதவீதம் குறைந்து 21,152 டன்னாக குறைந்துள்ளது. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் உற்பத்தி குறைந்ததே இதற்கு காரணமாகும். சென்ற ஆண்டின் இதே மாதத்தில் முந்திரி இறக்குமதி 70,493 டன்னாக இருந்தது.நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல்–ஜனவரி) முந்திரி கொட்டை இறக்குமதி 14 சதவீதம் குறைந்து 6.91 லட்சம் டன்னாக உள்ளது. சென்ற நிதி ஆண்டில் (2012–13) இறக்குமதி வரலாறு காணாத அளவிற்கு 9.19 லட்சம் டன்னாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.4,500 கோடியை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் 10 மாதங்களில் முந்திரி ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 1 லட்சம் டன் மற்றும் ரூ.4,206 கோடியாக உள்ளது. சென்ற நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி அளவு அடிப்படையில் 1.10 லட்சம் டன்னாகவும், மதிப்பு அடிப்படையில் ரூ.4,420 கோடியாகவும் இருந்தது.

இந்தியாவில் ஆண்டுக்கு 15 லட்சம் டன் முந்திரி கொட்டைகள் பதப்படுத்தப்படுகின்றன. இதில் ஐம்பது சதவீதத்திற்கும் மேல் இறக்குமதி மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது.

**பண்ருட்டி பகுதியில் பலா பழ சீசன் தொடக்கம் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணி தீவிரம்**



பண்ருட்டி,

பண்ருட்டியில் பலா பழ சீசன் தொடங்கியதை அடுத்து, அவைகளை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணியானது தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

***<u>பலாப்பழ சீசன்</u>***

கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதிகளான காடாம்புலியூர், மேல்மாம்பட்டு,முத்தாண்டிக்குப்பம், கீழக்குப்பம், காட்டுகூடலூர், சாத்திப்பட்டு உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பலா பயிர் செய்துள்ளனர். அதன் மூலம் அவர்கள் ஆண்டு தோறும் நல்ல வருமானமும் பெற்று வந்தனர். இந்த நிலையில் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு அடித்த தானே புயலில் சுமார் 30 முதல் 60 ஆண்டுகள் வரையிலான பழமைவாய்ந்த பலா மரங்கள் பல வேரோடு சாய்ந்தன. இதனால் விவசாயிகளின் வாழ்வாதரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் செய்வது அறியது தவித்து வருகின்றனர். இதனிடையே நடப்பாண்டில் பண்ருட்டி பகுதியில் பலா பழ சீசன் தொடங்கியதை அடுத்து, அதன் அறுவடை பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் நடப்பாண்டில் பலா பழங்கள் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இது குறித்து பண்ருட்டியை சோந்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>தானே புயல் பாதிப்பு</u>

தானே புயலால் பண்ருட்டி பகுதியில் பயிரிடப்பட்ட ஏராளமான பலா மரங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன. அதன் பாதிப்பு இன்னும் மறையாமல் உள்ளதால் பலா பழம் விளைச்சல் முழுமையடைய வில்லை. தானே புயலுக்கு முன்பு பண்ருட்டியில் உள்ள

பலா பழ குடோன்களில் இருந்து பிப்ரவரி மாதங்களில் மட்டும் நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையிலான பலா பழங்கள் லாரி மூலம் தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, மும்பை, புதுச்சேரி உள்ளிட்ட வெளி மாநிலங்ககளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பலா பழ சீசனின் உச்சகட்டமான ஏப்ரல் மாத தொடக்கத்தில் அவை 14 ஆயிரம் வரையில் உயர்ந்தது.ஆனால் நடப்பாண்டில் அவை தற்போது 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரையிலான பழங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் ஏப்ரல் மாதத்தில் பலா பழ ஏற்றுமதி 10 ஆயிரமாக உயரும் என தெரிகிறது. இந்த ஏற்றுமதிகுறைவிற்கு தானே புயலே காரணம் ஆகும்.

<u>விலை</u>

தானே புயலில் சாய்ந்த மரங்களுக்கு பதிலாக விவசாயிகள் புதியதாக நட்டுள்ள பலா பழ செடியானது தற்போது நல்ல முறையில் வளர்ந்து வருகின்றது. அவை விளைச்சலை கொடுக்க இன்னும் குறைந்தது 4 ஆண்டுகள் ஆகும். அது வரையில் விவசாயிகளும், எங்களை போன்ற வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கபடுவார்கள். பலா பழம் ஒன்றின் விலையானது அளவுக்கு ஏற்ப ரூ. 100–ல் இருந்து ரூ. 600 வரைக்கு விற்கபடுகின்றது. மொத்த விற்பனை என்றால் ஆயிரம் பழங்கள் ரூ. 15 ஆயிரத்தில் இருந்து ரூ.20 ஆயிரம் வரைக்கு விற்கபடுகின்றது. இவ்வாறு அவர் கூறினார்.

**கொடைக்கானலில் குரக்கோலி ரக காலிபிளவர்கள் விற்பனைக்கு வந்துள்ளன**



கொடைக்கானல்**,**

கொடைக்கானலில் வைட்டமின் சத்து அதிகம் உள்ள குரக்கோலி எனப்படும் பச்சைக்கலர் காலிபிளவர்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

<u>காலிபிளவர்கள்</u>

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில் ஏராளமான காய்கறிகள் விளைகின்றன. இதில் பிக்னிக் கோஸ் எனப்படும் சிறிய வகையிலான முட்டைகோஸ்கள் அவ்வப்போது விற்பனைக்கு வருவது உண்டு. அதேபோன்று பச்சைக்கலரில் உள்ள காலிபிளவர்களும் விளைச்சல் அடைந்து விற்பனைக்கு வந்துள்ளன. இவை குரக்கோலி என்று அழைக்கப்படுகின்றது. பல்வேறு வைட்டமின் சத்துக்கள் கொண்ட இந்த வகை காய்கறியை பொதுமக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். இவை பூ ஒன்றிற்கு ரூ.20 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது.

<u>விவசாயிகள் கவலை</u>

தற்போது மலைப்பகுதியில் விளையும் காய்கறிகளின் விலை வெகுவாக குறைந்து வருகின்றது. கேரட் கிலோ ஒன்றிற்கு ரூ.15 முதல் ரூ.20 வரையிலும், பச்சை பட்டாணி கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும் முள்ளங்கி, நூக்கல் போன்றவை கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**நத்தம் பகுதியில் 10 மி.மீட்டர் மழை பதிவு**



திண்டுக்கல்,

திண்டுக்கல் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து போனதால் விவசாயம் செய்ய முடியாமல் நிலங்கள் வறண்டு போயின. மழை அளவு குறைந்ததால் தண்ணீர் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. குடிக்க தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் திணறி வருகின்றனர். கோடைக்காலம் போல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் திண்டுக்கல்லில் ஒரு சில பகுதிகளில் நேற்று முன்தினம் லேசான மழை பெய்தது. இந்த திடீர் மழையால் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:– நிலக்கோட்டையில்

6.01, மில்லி மீட்டரும், நத்தத்தில் 10.5 மில்லி மீட்டரும், பழனியில் 1.5 மில்லி மீட்டரும் பதிவானது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

- 



•

செழுமையான செம்மண் பூமி. சிவந்த பழங்களுடன் தக்காளித் தோட்டம், பருத்த கிழங்குகளுடன் அறுவடைக்குத் தயாராகப் பீட்ரூட், பளிச் என வெள்ளை நிறத்தில் சிரிக்கும் முள்ளங்கிகள். நெல் வயல்கள், செங்கரும்பு, மக்காச் சோளம், அவரை, கொத்தவரை, பீன்ஸ், கத்தரி, மிளகாய் என ஒவ்வொரு காய்கறி, தானிய வகைக்கும் தனித்தனித் தோட்டங்கள். இன்னும் நெல்லி மரங்கள், கறிவேப்பிலை மரங்கள், குட்டை ரகத் தென்னைகள் என 35 ஏக்கர் பரப்பளவில் பசுமைப் போர்வை போலப் படர்ந்திருக்கும் விதவிதமான தோட்டங்கள். அத்துடன் இரண்டு மீன் வளர்ப்பு குளங்களும் உண்டு.

அது விவசாயப் பல்கலைக்கழக வளாகமோ, வேளாண் பண்ணையோ அல்ல. நம்பித்தான் ஆக வேண்டும், அது திருச்சி மத்தியச் சிறை வளாகம். சிறை வளாகத்தில் இப்படி வகைவகையான தோட்டங்களா என வியப்படைந்த நேரத்தில், இந்தத் தோட்டங்கள் அனைத்துமே இயற்கை விவசாய முறையில் பராமரிக்கப்படுகின்றன என்று சிறை அதிகாரிகள் கூறிய தகவல் மேலும் வியப்பைத் தருகிறது.

**மறந்துபோனது**

“ஆயுள் தண்டனை பெற்று 9 ஆண்டுகளாகச் சிறையில் உள்ளேன். நான் விவசாயக் கூலித் தொழிலாளியாக இருந்தவன். இவ்வளவு காலம் சிறை அறைக்குள்ளேயே

முடங்கிக் கிடந்தேன். தற்போது இந்தத் தோட்டத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது. பகல்பொழுதில் பெரும்பகுதி தோட்டத்திலேயே கழிந்து விடுகிறது. பகலில் கடுமையாக உழைப்பதால் இரவு நன்றாகத் தூங்குகிறேன். மறுநாள் காலை மீண்டும் தோட்டத்துக்கு வந்துவிடுகிறேன். இதனால் சிறையில் இருக்கிறோம் என்ற உணர்வே என்னிடம் மறைந்துவிட்டது" என்கிறார் சிறைத் தோட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மண்ணச்சநல்லூரைச் சேர்ந்த சி. கிருஷ்ணமூர்த்தி.இவரைப் போலவே தோட்டத்தில் பணியாற்றும் எல்லாக் கைதிகளுமே மனஉளைச்சல் அற்றவர்களாக, உறவுகளைப் பிரிந்திருக்கும் சோகத்தை மறந்தவர்களாக, அவரவர் சொந்தத் தோட்டத்தில் உழைப்பதைப் போன்ற நிறைவான மனநிலையில் பணியாற்றுவதை உணர முடிந்தது.

"விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இந்தச் சிறையில் பெரும்பாலும் உள்ளனர். இயல்பாகவே விவசாய நுட்பங்களை அறிந்தவர்கள் அவர்கள். அவர்களின் திறன்களைப் பயன்படுத்திக்கொள்ளச் சிறை வளாகத்தில் உள்ள இந்த இயற்கை வேளாண் தோட்டங்கள் பெரும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளன" என்கிறார் வழக்கறிஞர் வீ.கண்ணதாசன்.

**எப்படிச் சாத்தியமானது?**

சிறை வளாகத்தில் இது எப்படிச் சாத்தியமானது?

"சிறை வளாகம் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் கொட்டடி அல்ல. மறுவாழ்வைத் தேடித் தர வேண்டும் என்ற அடிப்படையில் முதல்வர் ஜெயலலிதா புதிய திட்டங்களை அறிவித்தார். அதன்படி கைதிகளிடையே திறன் வளர்ப்பு பயிற்சிகள், திறன் படைத்த கைதிகளைக்கொண்டு பொருள் உற்பத்தி, அவற்றைச் சந்தைப்படுத்தும் சிறை அங்காடிகள் போன்றவற்றை உருவாக்க முதல்வர் உத்தரவிட்டார்.

அதைத் தொடர்ந்து சிறைத் துறையின் ஏ.டி.ஜி.பி. ஜே.கே.திரிபாதி, தலைமையில் டி.ஐ.ஜி. ஏ.ஜி.மௌரியா ஆகியோர் அளித்த ஊக்கம் காரணமாகத் திருச்சி சிறை வளாகத்தில் இயற்கை வேளாண் பண்ணையை உருவாக்க முனைந்தோம்.

சுமார் 180 ஏக்கர் பரப்பளவு கொண்ட திருச்சிச் சிறை வளாகத்தில் பெரும்பகுதி சீமைக் கருவேல மரங்கள் நிறைந்த முட்புதர்கள்தான். அந்தச் சீமைக் கருவேல மரங்களை அழித்து, இந்தச் சாகுபடித் தோட்டங்களை உருவாக்க எங்களுக்குப் பல மாதங்கள் தேவைப்பட்டன.” என்கிறார் திருச்சி சரகச் சிறைத் துறை டி.ஐ.ஜி. ஆர்.துரைசாமி. இயற்கையைச் சிதைக்காமல் வேளாண்மை செய்ய, இங்கே மண்புழு உரமும் தயாரிக்கப்படுகிறது. இதுவரை 5 டன் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது நாளொன்றுக்குச் சுமார் 100 கிலோ தக்காளியும், 70 கிலோ வரை பீட்ரூட், முள்ளங்கி, அவரை, பீன்ஸ், கத்தரி உள்ளிட்ட காய்கறிகளும் கிடைக்கின்றன. சிறை பயன்பாடு போக எஞ்சியவற்றை விற்பனை செய்யச் சிறை வாசலிலேயே அங்காடி திறக்கப்பட்டுள்ளது. ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தாமல் உற்பத்தி செய்யப்பட்ட ஊட்டம் மிகுந்த காய்கறிகள் என்பதால், இந்த அங்காடிக்குப் பொதுமக்களிடம் அமோக வரவேற்பு.

சிறைக் கண்காணிப்பாளர் த.பழனி, மற்றொரு கண்காணிப்பாளர் கே.ஜெயபாரதி, கூடுதல் கண்காணிப்பாளர் மா.செந்தில்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் சிறை நிர்வாகம் தவிர்த்து, இயற்கை வேளாண் நுட்பங்களிலும் தேர்ந்த அனுபவம் பெற்றிருப்பதன் காரணமாகவே இவை அனைத்தும் சாத்தியப்பட்டுள்ளன.

சிறைக்குள் மனித வளத்துக்குப் பஞ்சமில்லை. சிறை அறைகளுக்கு வெளியே வளம் மிகுந்த செம்மண்ணும், நிறைந்திருக்கும் நீர் வளமும் உள்ளன. இந்த வளங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியதன் காரணமாகத் திருச்சி மத்தியச் சிறை வளாகம், இன்றைக்கு இயற்கை வேளாண்மையின் பெருமைமிகு அடையாளமாக மாறியிருக்கிறது.